விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 21 புதன்கிழமை (06.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 261

## இணைந்த வட - கிழக்கில், சுயநிர்ணய அடிப்படையில் மத சார்பற்ற சமஷ்டி தீர்வே வேண்டும்

### தமிழ் மக்கள் பேரவை பிரகடனம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

அரசுக்கு தமிழர்களின் அரசியற்பிரச்சினையை தீர்ப்பது குறித்தோ அல்லது நேர்மையான பொறுப்புக் கூறல் குறித்தோ உண்மையான அரசியல் விருப்பு இல்லை என்பதுடன் அரசின் முன்னெடுப்புகள் மீது தமிழர்கள் நம்பிக்கையை இழந்திருப்பதால் சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் தமது நேரடித் தலையீட்டை தாமதமின்றி மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என தமிழ் மக்கள் பேரவையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு நேற்றையதினம் காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. துறைசார் நிபுணர்கள் அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலின் இறுதியில் மக்களின் கருத்துகளின் முடிவாக வெளியிடப்பட்ட பிரகடனத்திலேயே மேற்குறித்தவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கையில்,

- இலங்கைத்தீவின் இனப் பிரச்சினைக்கான தீர்வானது, இந்த இனப்பிரச்சினையின் அடிப் 24

# எம்மை நாமே ஆள வழிவிடுங்கள்
# சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டியே தீர்வாக வேண்டும்

### தீர்வு வரும்வரை சளைக்காது போராட முன்வருமாறு முதல்வர் அறைகூவல்




மேலும் படங்கள் 06ஆம் பக்கத்தில்...

*(யாழ்ப்பாணம்)*

எம்மை நாமே ஆளும் சமஷ்டித் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதை விடுத்து அரைகுறை தீர்வை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஷ்டி தீர்வு கிடைக்கும்வரை சளைக்காது போராட தமிழ் மக்கள் முன்வர வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

*(03ஆம் பக்கம் பார்க்க)*

## உள்ளக சுயநிர்ணய உரிமையை உயர் நீதிமன்றம் ஏற்றுள்ளதா?

### சுமந்திரனின் பரப்புரை பொய் என்கிறார் குருபரன்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் உயர் நீதிமன்றம் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பரப்புரை செய்து வரும் நிலையில், அவ்வாறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை என யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் அடியோடு மறுத்துள்ளார்.

மேலும் 13 ஆம் திருத்த சட்டத்தை ஒத்ததாக புதிய அரசியலமைப்பு வரப் போகின்றது எனவும் எதிர்வு கூறியுள்ளார். தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் புதிய அரசி 23

## வெலிக்கடை தாக்குதல் சாட்சியின் வீடு மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அரச பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக 27 கைதிகள் கொல்லப்பட்டு 23

## அரசை வீழ்த்தும் எமது செயற்பாட்டை தடுக்க முடியாது

### மகிந்த ராஜபக்ஷ.



(கொழும்பு)

அரசை வீழ்த்தும் பலமான மாற்று அணியொன்று உருவாகுவதைத் தடுக்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த 23

## கலப்பு நீதிமன்றம் இல்லையேல் சர்வதேச விசாரணையே நடக்கும்

### சுமந்திரன்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய அல்லது அவர்களுடன் இணங்கிக்கொண்ட விடயங்களைச் செய்வதுதான் நல்லது என்று 23

## வடக்கு - கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கு எதிரானது என அரசு திட்டமிட்டு பரப்புரை

### மௌசூர் மௌலானா குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் என்ற கருத்தை இந்த அரசாங்கம் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகிறதென தெரிவித்த சட்டத்தரணியும் சித்தி லெப்பை ஆய்வுமையத்தின் தலைவருமான மௌசூர் மௌலானா, தமிழ்த் தேசியத்தினுடைய எதிர்காலம் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உள்ளக மோதலால்தான் சிதைக்கப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். 23

## நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணாமல் போனோரின் உறவுகளை இன்று சந்திக்கிறார் ஜனாதிபதி!

(கொழும்பு)

காணாமல் போனோரின் உறவுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ஜனாதிபதி மாளிகையில் சந்திக்கவுள்ளார். வடக்கு மாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தலா ஒருவர் வீதம் இந்தச் சந்திப்புக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்டவர்கள் மாவட்டச் செயலகங்களின் ஏற்பாட்டில் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவர்களுக்கான தேர்வு மற்றும் பயண ஒழுங்குகள் அனைத்தும் மாவட்டச் செயலகங்களே முன்னெடுக்கின்றன.

காணாமல் போனோரின் உறவுகள் கடந்த 200 நாட்களாக தமது உறவுகளின் நிலையைத் தெரிவிக்குமாறு கோரி யாழ் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் போராட்டம் நடத்தி வரும் சூழலில் குறி த்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். குறித்த ஊடக சந்திப்பு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் இடம் பெறும் பகுதியில் இடம்பெற்றது.

ஜனாதிபதி இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்திக்க உள்ளதாக தெரிவித்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அறிகின்றோம். அவர் எதற்காக சந்திக்கின்றார்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிற்கு நட்ட ஈடு வழங்க சந்திக்கின்றாரா? வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து எம்மை சந்தித்த ஜனாதிபதி இன்று வரை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இன்று இடம்பெறவுள்ள சந்திப்பு எதற்காக? வெளிநாட்டு இராஜதந்திரிகளை ஏமாற்றுவதற்காகவா?

காணாமல் ஆக்கப்பட்ட உறவுக்ளின் சங்கம் என நாம் இங்கு உள்ள நிலையில், இவர்கள் அழைத்து செல்வது யாரை? இந்த ஊடக சந்திப்பின் மூலம் நாம் பகிரங்கமாக தெரியப்படுத்துவது யாதெனில், இன்று இடம் பெறும் சந்திப்பில் கலந்து கொள்பவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அல்ல. அவர்கள் அழைத்து செல்பவர்கள் எப் படியானவர்கள் என்பது எமக்கு தெரியாது என அவர்கள் மேலும் குறித்த சந்திப்பில் தெரிவித்திருந்தனர். (மு-312)


## வாகனங்கள் வாடகைக்கு தேவை

நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் மாத வாடகைக்குத் தேவை.

**0764481101** (446)



**வைத்திய சேவை சங்கானையில்!**

- நோயாளர்கள் பராமரிப்பு சேவை.
- வைத்திய நிலையத்திற்கு வரமுடியாத நோயாளர்களை MBBS வைத்தியர் வீட்டில் வந்து பார்வையிடுவார்
- வயோதிபர்கள் தங்குமிட வசதி

**சம்பந்தர் மொடேர்ண் கெல்த் கெயர்**

(நாகநாதர் வைத்திய நிலையம் அருகே சங்கானை) **0778730129** (447)



## ஆசிரியர்கள் தேவை

மேர்சி கல்வி வளாகம் புத்தளம், மதுரங்குளியில் 23 ஏக்கர் நிலப்பரப்பில் விடுதி வசதிகளுடன் கூடிய ISO 9001:2008 சான்றிதழ் பெற்ற கல்வி நிறுவனமாகும்.

இங்கு பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரை கிட்டத்தட்ட 1000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அத்துடன் இவ்வளாகத்தில் தொழிற் பயிற்சிக் கல்லூரியும் அமையப் பெற்றுள்ளது.

இங்கு உயர்தர வகுப்பில் பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்கு குறித்த பாடங்களில் பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

- **இணைந்த கணிதம்**
- **பௌதிகவியல்**
- **இரசாயனவியல்**
- **உயிரியல்**
- **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்** (ICT)

கவர்ச்சிகரமான சம்பளத்துடன், உணவு மற்றும் தங்குமிட வசதி என்பனவும் வழங்கப்படும்.

உரிய கல்வித் தகைமையும், அனுபவமும் உடையவர்கள் (இளைப்பாறியவர்கள் உட்பட) உரிய ஆவணங்களுடன் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடையில் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது தற்காலிக காரியாலயத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர்.

**124/2, முஸ்லிம் கல்லூரி வீதி, சோனகத்தெரு, யாழ்ப்பாணம்.**

**(ஒஸ்மானியா கல்லூரிக்கு முன்பாக)**

**0779401470, 0772379711** என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
மேர்சி கல்வி வளாகம்.

(438)



## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்துக்கு இரு விற்பனையாளர்கள் தேவை. பழகியவர்களும் பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.(பெண்கள்)

- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-955)



## வேலையாட்கள் தேவை

லொத்தர் சபை விநியோக அலுவலகம் மற்றும் லொத்தர் விற்பனைப் பகுதி வேலைகளுக்கு யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர் ஆகிய பிரதேசங்களுக்கு ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. தகுந்த சம்பளம் காப்புறுதி மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-**

**0775164928, 021 221 5777** (448)



# மணிவிழா வாழ்த்துக்கள்



நாற்பது ஆண்டுகளாக இலங்கை வங்கியில் சேவையாற்றி இன்று (06.09.2017) ஓய்வு பெறும் எமது கிளை முகாமையாளர்

## திரு. தர்மலிங்கம் பிருதிவிராஜ்

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்

**சேவையாற்றிய கிளைகள்**

| | |
|---|---|
| வவுனியா- | 01.03.1977 |
| ஒலுமடு- | 1977-1979 |
| முல்லைத்தீவு- | 1979-1981 |
| யாழ்ப்பாணம்- | 1981-1986 |
| கிளிநொச்சி- | 1986-1991 |
| யாழ்ப்பாண்ம்- | 1991-1999 |
| மானிப்பாய்- | 1999-2005 |
| யாழ்ப்பாணம்- | 2005-2011 |
| மானிப்பாய்- | 2011-2012 |
| சங்கானை- | 2012-2013 |
| காங்கேசன்துறை- | Ja 2014- Dec 2014 |
| திருநெல்வேலி- | Dec 2014-04.09.2017 |

Best Wishes


முகாமையாளரும், ஊழியர்களும்

**இலங்கை வங்கி, திருநெல்வேலி கிளை**

(290)

# எம்மை நாமே ஆளும் சமஷ்டி தீர்வே வேண்டும்

## அரைகுறைத் தீர்வை எக்காரணம் கொண்டும் ஏற்கமுடியாது
## வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசேட உரை



(யாழ்ப்பாணம்)

எம்மை நாமே ஆளும் சமஷ்டித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது தமிழர் தலைமைகளுடைய கடமையாகும். அதைவிடுத்து வெறுமனே அரைகுறைத்தீர்வினை ஏற்றுக் கொள்வது எக்காரணத்தைக் கொண்டும் எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. பிரச்சினையைத் தீர்ப்போம் எனக் கூறிக் கொண்டு ஒரு பெயரில் என்ன இருக்கின்றது என்று கூறிக் கொண்டு குறைந்தளவு அதிகாரப் பரவலாக்கம் ஒன்றுடன் இணங்கிச்செல்வதை விட தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் அவர்களது நீண்ட கால அரசியல் கோரிக்கைகளையும் முன்வைத்து உரிய தீர்வு வரும் வரை சளைக்காது முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது இராணுவ வீரர்களை விட்டுக் கொடுக்க மாட்டோம். அவர்களுக்கெதிராக விசாரணை செய்ய விட மாட்டோம் என்று அமைச்சர்கள் மட்டத்தில் ஜனாதிபதி மட்டத்தில் அடித்துக் கூறும் போது தமது இராணுவ வீரர்கள் யுத்தக் குற்றங்களில் கட்டாயமாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றார்கள் தெற்கத்தேய அரசியல் தலைவர்கள். அது எமக்குச் சார்பாக அமைகின்றது. தற்போது முன்னாள் தளபதி சரத் பொன்சேகா, ஜெகத் ஜெயசூரிய என்ற முன்னைய இராணுவத் தளபதி யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார் என்பது பற்றி சாட்சியம் அளிக்கப் போவதாக பகிரங்கமாகக் கூறியுள்ளார். ஆகவே குற்றவாளிகள் தாமாகவே அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே தான் சர்வதேச நீதிபதிகளுடன் யுத்தக் குற்ற விசாரணையானது விரைவில் நடைபெற வேண்டும் என்று கோருகின்றோம். ஜனாதிபதி தமது போர் வீரர்களை எப்படியும் காப்பாற்றுவோம் என்று கூறும் போது உள்ளூர் நீதிபதிகள் உரியவாறு நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்று நாங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் புதிய அரசியலமைப்பு தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் பேரியக்கமாக இயங்க வேண்டிய தமிழ் மக்கள் பேரவை இரண்டு பிரமாண்டமான "எழுக தமிழ்" கூட்டங்களின் பின்னர் கும்பகர்ணன் போல் தூங்கப் போய்விட்டதா என்ற கேள்வி எழுந்ததால்தான் நாங்கள் விழிக்கத் தொடங்கியுள்ளோம். கட்சியாக இருப்பது இலேசான காரியம். தேர்தல் காலத்தில்எழுந்து கொண்டு மக்களுக்கு "சந்திரனைத் தருவோம்" "சூரியனைத் தருவோம்" என்று கூறி வாக்கெடுத்து விட்டு மீண்டும் தூங்கப் போகலாம். ஆனால் ஒரு மக்கள் பேரியக்கமாகப் பரிணாமம் பெற்று அதே பரிமாணத்தில் தொடர்வதென்பது அவ்வளவு இலேசான காரியமன்று. பேரியக்கங்களில் இருப்போர்க்கு அர்ப்பணிப்பு அவசியம். சதாகாலமும் எம்மை நம்பியிருக்கும் எம் மக்களின் நலன். பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்க வேண்டிய கடப்பாடு மக்கள் இயக்கங்களுக்கு உண்டு.

தமிழ்மக்கள் பேரவையை வழி நடத்தும் அனைவரும் தொடர் காரியங்கள் பலவற்றில் சதாகாலமும் ஈடுபட்டவர்கள். தமது தொழில் ரீதியான பொறுப்புக்களில் இருந்து எளிதில் விடுபட முடியாதவர்கள். ஆகவே தான் எம்மை வருத்தி இவ்வாறான கூட்டங்களில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டிய பொறுப்பு எமது ஒழுங்கமைப்பாளர்களுக்கு உண்டு. எம் அனைவரதும் அர்ப்பணிப்பு, ஆர்வம், ஈடுபாடு என்பவற்றில் எவருக்குஞ் சந்தேகம் இருக்காதென்று நினைக்கின்றேன். ஆனால் காலநேரத்தின் கட்டுப்பாடுகள் எம்மை சதாகாலமும் கலக்கிக் கொண்டே இருக்கின்றன. அப்படி இருந்தும் இந்தக் கூட்டத்தைச் சிறப்புற ஒழுங்கு செய்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் முதற்கண் தெரிவிக்கின்றேன்.

எம்முடன் வழக்கமாகக் கலந்து கொள்ளாத ஆனால் எம்முடன் தொடர்பில் இருக்கும் நிலாந்தன், யோதிலிங்கம், மௌசூர் மௌலானா, பேராசிரியர் கணேசலிங்கம், குசல் பெரேரா ஆகியோரை வரவேற்பதில் மன மகிழ்வடைகின்றேன். கொழும்பில் இருந்து வந்துள்ள குசல்பெரேராவுக்குச் சிறப்பான எனது பிரத்தியேக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உகந்த கேள்விகளைக் கேட்டு அவற்றை அலசி ஆராய்வதால் கூட்டத்தில் இருந்து செவிமடுப்போர் நன்மை பெறுகின்றார்கள். உண்மை நிலையை விளங்கிக் கொள்கின்றார்கள். அரசியலமைப்பு விடயத்தில் பெரும் பான்மையினர் முகத்தைச் சுளிப்பார்கள் என்பதால் எமது தேவைகளையும், முன்னுரிமைகளையும், அபிலாஷைகளையும், நோக்குகளையும் மூட்டை கட்டி வைக்க வேண்டுமா?.

அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன். ஒரு மத்திய அமைச்சர் வட மாகாணத் திணைக்களம் ஒன்றிற்குச் சில நிதி உதவிகள் செய்து அந் நிதியில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அதனைத் திறக்க இருக்கும் போது அதற்கு ஒரு சிங்களப் பெயர் வைக்க வேண்டும் என்றார் அமைச்சர். எமது அலுவலர்கள் அதற்கென்ன என்று கூறி அவர் வந்து கட்டடத்தைத் திறக்க நாள் நேரமும் குறித்தாகி விட்டது. அப்போது தான் இது பற்றி எனக்குத் தெரிய வந்தது. "ஏன் சிங்களப் பெயரை எமது மாகாணத்தில் கட்டிய கட்டடத்திற்கு வைக்கச் சம்மதித்தீர்கள்?" என்று கேட்டேன். "அவர்கள் பணந்தானே! அது தான்" என்றார்கள். "பணம் தரும் போது உங்கள் கட்டடத்திற்கு சிங்களப் பெயர் தான் வைக்க வேண்டும். இல்லையேல் பணம் தரமுடியாது என்று கூறினாரகளா?" என்று வினவினேன். "இல்லை" என்றார்கள். "அப்படியானால் அவர்கள் பணம் தந்தபடியால் அவர்கள் கூறும் பெயரை வைக்க உங்களுக்கு ஒரு கடப்பாடு இருப்பதாகக் கூறுகின்றீர்களே" என்றேன். "முன்னரே சலுசல, ஒசுசல என்று பல பெயர்கள் வழக்கில் இருக்கின்றன தானே?" என்றார்கள். "அப்போது எமது மக்களின் பிரதிநிதிகள் இருக்கவில்லை. உங்களைப்போன்ற அலுவலர்கள் தான் இருந்திருப்பார்கள். நீங்கள் இப்போது சிந்திப்பது போலத்தான் அப்போதும் அலுவலர்கள் சிந்தித்திருப்பார்கள். அதை வைத்து இப்பொழுது எமது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கும் போது அவ்வாறான ஒரு செயலுக்குச் சம்மதம் தெரிவிப்பது ஒரு பிழையான காரியம் அல்லவா?" என்றேன். பதிலில்லை.

ஆனால் அடுத்த நாள் மத்திய அமைச்சரே தொலைபேசியில் என்னுடன் பேசினார். "நாங்கள் நாடு பூராகவும் இதே பெயரைத்தான் இப்பேர்ப்பட்ட கட்டடங்களுக்கு வைக்கின்றோம். நீங்களும் அதற்கு உடன்பட வேண்டும்" என்றார். "ஏன் அதற்கு உடன்பட வேண்டும்?" என்று கேட்டேன். "இது ஒரே நாடு. பெயர்களில் ஒற்றுமை இருக்க வேண்டும்" என்றார். நான் சிரித்துவிட்டு "நாடு ஒன்று தான். ஆனால் நாங்கள் வேறு. நீங்கள் வேறு. உங்கள் மொழி வேறு. எங்கள் மொழி வேறு. உங்கள் மதம் வேறு, எங்கள் மதம் வேறு, உங்கள் வாழ்க்கை முறை வேறு, எங்கள் வாழ்க்கை முறைவேறு. இதற்காகத்தானே நாங்கள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு அரசியல் யாப்பிற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்கள் தனித்துவத்தை நீங்கள் மதிக்க வேண்டும்" என்றேன். அவர் ஒன்றும் கூறவில்லை. ஆனால் திறக்க அவர் வரவுமில்லை. அந்தக் கட்டடம் இன்னமும் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படவில்லை என்றே நம்புகின்றேன்.

இங்குதான் முதலாவது கேள்விக்கான பதில் மறைந்துள்ளது. மற்றவர்கள் முகத்தைச் சுளிப்பார்கள் என்பதால் நாம் எமது தனித்துவத்தை விட்டுக் கொடுத்தால் இருபது வருடங்களில் எல்லாமே ஒசுசல, லக்சல, சலுசல ஆகிவிடுவன. எம்முட் சிலர் இவை யாவும் மரங்கள் தானே என்று பார்க்கின்றோம். ஆனால் வனத்துள் நுழைந்துவிட்டோம் என்பதை அறியாமல் இருக்கின்றோம். நேரஞ் சென்றதும் கொடிய காட்டு மிருகங்களுடன் போராட நேர்ந்திடும் என்பதை உணராமல் இருக்கின்றோம் "அதற்கென்ன! இன்று ஒரு சலுசல என்று பெயர் வைத்தால் குடியா முழுகிப் போய்விடும்?" என்று சிலர் கேட்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய பதில் "ஆம்! எமது தமிழ்ப் பேசுங் குடியே முழுகிப்போய்விடும்" என்பதே.


அடுத்த கேள்வி பெயரில் என்ன இருக்கின்றது என்பது. எங்களுக்குத் தேவை அதிகாரப்பரவல். அது ஒற்றையாட்சிக்குள் வந்தால் என்ன?, சமஷ்டி என்ற ஒரு பெயர் தாங்காத ஒரு அலகின் கீழ் வந்தால் என்ன? என்று சிலர் கேட்கின்றார்கள். இங்கு தான் சட்டத்தைப் பற்றியும் உச்ச நீதிமன்றத்தைப் பற்றியும் சற்றுச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. எவ்வளவு அதிகாரப்பரவல்கள் ஒற்றையாட்சியின் கீழ் பெறப்பட்டாலும் அது "கொடுத்தவனே எடுத்துக்கொண்டாண்டி" என்ற நிலைக்கு எத்தருணத்திலும் வரமுடியும் என்பதை நாங்கள் மறக்கக்கூடாது. ஒரு தந்தையார் மகனுக்கு கைப்பைக்காசு வாராவாரம் கொடுத்து வருகின்றார். ஏதோ காரணத்திற்காக அவர் கொடுக்காமல் விடுகின்றார். மகன் அப்படி உங்களால் செய்யமுடியாது கொடுத்தே ஆகவேண்டும் என்கின்றான். அது எனது முடிவு என்று தந்தையார் கூறுகின்றார். மகன் உச்ச நீதிமன்றம் சென்றாலும் அதேவாறு தான் பதில் கிடைக்கும். அதாவது தனது நல்லெண்ணம் காரணமாகவே கைப்பைக்காசை தந்தை மகனுக்குக் கொடுத்தார். அதை நிறுத்த தந்தைக்குரித்துண்டு என்று கூறுவார்கள்.

தந்தையார் தாயாரிடம் கொடுத்து தாயார் மகனுக்குக் கொடுக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். இது ஒரு வித பெயர் குறிப்பிடாத சமஷ்டி என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தாலும் உச்ச நீதிமன்றமோ ஒற்றையாட்சியின் ஒரு பரிமாணமே இது என்று தான் பதில் இருக்கும். எங்களுடைய பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் இந்த வகையைச் சேர்ந்தது. தாயார் போல் ஆளுநர் இருந்தாலும் இயக்குவது தந்தையான அரசாங்கமே. ஆகவே பெரும்பான்மையினரின் தற்துணிவின் பேரில் அவர்கள் அடக்கியாளக்கூடிய அதிகாரத்துடன் தயாரிக்கப்படுகின்ற எந்த ஒரு அரசியல் யாப்பும் தமிழ் மக்களுக்கு விமோசனத்தை அளிக்க மாட்டா. மாறாக முற்று முழுதாக சட்டப்படி வர்ணிக்கப்பட்டு தமிழர்க்குத் தரப்படும் அதிகாரங்கள் திரும்பிப்பெற முடியாதவையாக இருந்தால் தான் நாம் எதிர்காலத்தில் சுதந்திரமாக வாழமுடியும். நாங்கள் பிரிந்து போவோம் என்ற அச்சம் சிலரால் வெளிப்படுத்தப்படுகிறது. பிரிந்து போகாது இருக்க வேண்டுமானால் அதற்கு உரிய நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கலாம். இந்தியா, இங்கிலாந்து என்று எந்த நாட்டிடமும் கோரி எம்முடன் உடன்படிக்கையின் மூலம் பிரிவினைக்கெதிரான ஒரு உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எக்காலத்திலும் எம்மை நாமே ஆள வழி விடுங்கள் என்பதே எமது கோரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டிக் கோரிக்கை என்பது இன்று நேற்று தொடங்கப்பட்டதல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்த ஒரு சில ஆண்டுகளிலேயே தந்தை செல்வநாயகத்தால் சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இச் சமஷ்டிக் கோரிக்கையினை 65 வருட காலமாகத் தொடர்ந்து தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். ஆகவே வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் எம்மை நாமே ஆளும் சமஷ்டித் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது தமிழர் தலைமைகளுடைய கடமையாகும். அதை விடுத்து வெறுமனே அரைகுறைத் தீர்வினை ஏற்றுக் கொள்வது எக்காரணத்தைக் கொண்டும் எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று. பிரச்சினையைத் தீர்ப்போம்எனக்கூறிக்கொண்டு, ஒரு பெயரில் என்ன இருக்கின்றது என்று கூறிக் கொண்டு குறைந்தளவு அதிகாரப் பரவலாக்கம் ஒன்றுடன் இணங்கிச் செல்வதை விட தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் அவர்களது நீண்ட கால அரசியல் கோரிக்கைகளையும் முன்வைத்து உரிய தீர்வு வரும்வரை சளைக்காது முன்னெடுத்துச் செல்வது அவசியமானதொன்று என்றே நான் கருதுகின்றேன்.

(நாளை தொடரும்)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
11.05.1940

மறைவு
03.09.2017

## அமரர் வில்விறெட் யேசுநாதன் சூசைரட்ணம்

(இறம்பைக்குளம், வவுனியா)

(ஓய்வுநிலை விரிவுரையாளர், தலைவர் - வணிக முகாமைத்துவபீடம், வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்)

முல்லை மாவட்ட வணிகர் கைத்தொழில் வேளாண் ஒன்றியம் முன்னைநாள் ஒருங்கிணைப்பாளர் அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

துயரில் பகிர்வுறும்
முல்லைத்தீவு மாவட்ட வணிகர் கைத்தொழில் வேளாண் ஒன்றியம், முல்லைத்தீவு.

(C-9555)

# மரண அறிவித்தல்



## திருமதி நாகராணி இராசதுரை

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராணி இராசதுரை நேற்று (05.09.2017) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (சீனியர்) - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் இரவீந்திரன், சசீந்திரன் (சசி), இராஜேஸ்வரன், காலஞ்சென்ற ரதிவதனி, தர்மசீலன் (அப்பன்), யோகவதனி, மதிவதனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைசிங்கம், யோகராணி, மகாதேவன், காலஞ்சென்ற சிவபாலசுப்பிரமணியம் (பாப்பா - சிவாஸ் ஸ்ரூடியோ) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மதியுகவதனி, ஈஸ்வரி, சிவபதி, உதயகுமார், தாரனி, வாசுகரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரியதர்சன், கீதப்பிரியா, கம்ஷனா, ரவிவர்மா, பவித்திரன், பவிஷனா, மோனிஷா, கோபிஷா, தேனுகா, நிவர்சிகா, சிவானியா, ஜதுர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் கபினாஷ், விபுஷன், நிந்துஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.09.2017) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-9549)

## ஒரேயொரு ரி20; இலங்கை - இந்தியா இன்று மோதல்

இலங்கை - இந்தியா அணிகள் இடையேயான ஒரே ஒரு ரி20 போட்டி இன்று கொழும்பில் நடைபெறுகிறது. ரி20 போட்டியிலாவது இலங்கை வெற்றி பெறுமா என்று இரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கிலும் இந்தியா முழுமையாக கைப்பற்றி இலங்கையை வெள்ளையடிப்புச் செய்தது.

இந்நிலையில் இலங்கை - இந்திய அணிகள் மோதும் இடையேயான ஒரே ஒரு ரி20 போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் இன்று நடைபெறுகிறது..

20 ஓவர் போட்டியிலும் வென்று இந்தியா தனது ஆதிக்கத்தை நீட்டித்து கொள்ளும் ஆர்வத்துடன் உள்ளது. துடுப்பாட்டம் மற்றும பந்துவீச்சில் சமபலத்துடன் இருக்கும் இந்திய அணி இன்றைய போட்டியிலும் வெற்றி பெறும் வேட்கையுடன் இருக்கிறது.

துடுபபாட்டத்தில் அணித் தலைவர் ஹோலி, ரோகித் சர்மா ஆகியோர் மிகவும் நல்ல நிலையில் உள்ளனர். இருவருமே ஒருநாள் தொடரில் இரண்டு சதம் அடித்து முத்திரை பதித்து இருந்தனர். இதுதவிர தோனி, ஹர்த்திக் பாண்ட்யா, கேதர் ஜாதவ், மனிஷ் பாண்டே போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர்.

பந்துவீச்சில் பும்ரா மிகவும் நல்ல நிலையில் உள்ளார். அவர் ஒருநாள் தொடரில் 15 விக்கெட வீழ்த்தி முத்திரை பதித்து இருந்தார். இது தவிர அக்ஷர் பட்டேல், புவனேஷ்வர் குமார் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்த இலங்கை அணி 20 ஓவர் போட்டியிலாவது வென்று ஆறுதல் அடையும் ஆர்வத்துடன் இருக்கிறது. வெற்றிக்காக அந்த அணி வீரர்கள் மிகவும் கடுமையாக போராடுவார்கள்.

இரு அணிகளும் 20 ஓவர் போட்டியில் இதுவரை 10 முறை மோதியுள்ளன. இதில் இந்தியா 6 ஆட்டத்திலும் இலங்கை 4 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

## நலமுடனும் வளமுடனும் வாழ மனதார வாழ்த்துகின்றோம்



சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து வரும் இலங்கை வங்கி திருநெல்வேலி கிளை முகாமையாளர்

### திரு. தர்மலிங்கம் பிருதீவிராஜ் அவர்கள்

அறுபது அகவை பூர்த்தி செய்து தனது வங்கிப் பணியிலிருந்து இன்று ஓய்வுபெற்று மணிவிழா காணுகின்றார். மணிவிழா நாயகனான திரு.பிருதீவிராஜ் அவர்கள் குடும்ப நலத்துடன் நீண்டகாலம் வாழ வேண்டும் என இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி நண்பர்கள்.

(C-9552)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ். கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பரீட்சை தோற்றிய மாணவிகளே! உங்களுக்கான பெறுபேறுகள் வரும் வரை உள்ளதான காலத்தை பயனுள்ளதாக்குவீர்! மற்றும் வெளிநாடு செல்ல தயாராகி வரும் மங்கையரே! சுயதொழில் செய்ய விரும்பும் நங்கையரே! ஆர்வமுள்ள மகளிரே!

**உங்களுக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 10-09-2017 ஞாயிறு காலை 10.00 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 11-09-2017 திங்கள் காலை 10.00 மணி

☞ இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகள் அதனை உறுதிப்படுத்தும் பட்சத்தில் கட்டணத்தில் 20% கழிவு வழங்கப்படும்.

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

# AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY
## TP : 021 205 7455

கார்த்திகேயாய வித்மஹே சக்தி ஹஸ்தாய தீமஹி!
தந்நோ ஸ்கந்த ப்ரசோதயாத்! ஓம்... முருகா முருகா முருகா!

- சகல வைபவங்களுக்குமான உயர்தர உணவு களை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வட மாகாணத்தில் அதிகூடிய உணவு உற்பத்தியாளர்கள்.
- வடக்கு முழுவதற்கும் இலகுவான விநியோக முறை.
- மிக மிக சுத்தமான கைதடி உணவுத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.




## ஆச்சி (FOOD FACTORY)
## ஆச்சி ஹொட் பூட் ரெஸ்ரோரன்ஸ்

கைதடி கிழக்கு,
கைதடி.

147, பலாலி வீதி,
திருநெல்வேலி.

## TP:-021 222 5001










www.lolclife.com



# My Life
# My Family
# My LOLC Insurance!

உங்கள் வாழ்க்கைக்கு முழுப்பாதுகாப்பையும் வழங்கி உங்கள் சந்தோஷத்தை என்றென்றும் நிலைக்கச்செய்திட LOLC இன்சூரன்ஸ் தயார்.

- இலகுவான தீர்வுகள், மற்றும் உரித்துடைமை செயற்திட்டங்கள்
- ஈடுகொடுக்கக்கூடிய தவணைக் கட்டணங்கள்
- உங்கள் அருகில் வந்து சேவை வழங்கப்படும்
- உங்கள் தேவைக்கேற்ற வகையில் ஆயுள், சிறுவர், முதலீடு, ஓய்வூதியம் மற்றும் கடன் காப்புறுதி திட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

LOLC LIFE ASSURANCE
(An **LOLC** Group Company)

இல. 481, டி.பி. ஜெயா மாவத்தை, கொழும்பு 10 ✆ 011 500 80 80

# புதிய அரசியலமைப்பு தொடர்பாக தெளிவுபடுத்தும் தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் யாழில்



தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் புதிய அரசியலமைப்பு தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைமையுரையை வடக்கு மாகாண முதலமைச்சரும் பேரவையின் இணைத்தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றியிருந்தார். தொடர்ந்து அரசியலமைப்பாக்க அவையில் தமிழர் முன்வைக்க வேண்டியது தமிழ்த் தேசத்தை தற்காத்து கொள்ளும் தீர்வையா? நடைமுறை சாத்தியம் எனும் பெயரில் சிங்களம் திணிக்க முயல்வதையா? எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் கருத்துரை வழங்கினார். ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் சமஷ்டி சாத்தியமா? புதிய அரசியலமைப்பு "ஒற்றையாட்சி சமஷ்டி" என்ற பதங்கள் தாங்கி வெளிப்படையாக இனங்காணப்பட வேண்டுமா? என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கு.குருபரனும் கருத்துரையாற்றியிருந்தார். இதற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் பதிலுரை ஆற்றியிருந்தார். வடக்கு- கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும் எனும் தலைப்பில் சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சி.அ.யோதிலிங்கம் உரையாற்றியிருந்தார். இதற்கு சட்டத்தரணியும் சித்திலெப்பை ஆய்வு மையத்தின் தலைவருமான மௌசூர் மௌலானா பதிலுரை ஆற்றியிருந்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அமெரிக்க, சீன, இந்தியா நலன்களை விளங்கிக் கொள்ளல் எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற்றுறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் கருத்துரை ஆற்றியிருந்தார். இதற்கு இலங்கை தமிழரசு கட்சியின் மத்தியகுழு உறுப்பினரும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியருமான சி.க சிற்றம்பலம் பதிலுரை வழங்கியிருந்தார். அரசியலமைப்பு உருவாக்க முயற்சியின் போக்கு எனும் தலைப்பில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் பதிலுரை ஆற்றியிருந்தார். தொகுப்புரையை சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் குசல் பெரேரா வழங்கியிருந்தார்.

பேரவையின் இணைத்தலைவர் ரி.வசந்தராஜா பேரவையின் பிரகடனத்தை வெளியிட்டார். இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள்,அரசியல் தலைவர்கள், வைத்தியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள் :உ.சாளின் )

## இராசி பலன்

06.09.2017
(ஆவணி 21, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04மணிக்கு
பூரணை பிற்பகல் 12.59 மணிவரை
சதயம் பிற்பகல் 2.12 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
மஹாளயபட்ச ஆரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ஆயிலியம்- மகம் | | |
| சந் | | | |
| | சனி | குரு | |

**மீனம்** மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், செலவுகளில் தாராளம் காட்ட முற்படுவீர்கள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**மேடம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**கும்பம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை யடைவீர்கள், போசன சுகமுண்டு, தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கடகம்** புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, நண்பர்கள் மனங்கோணாது நடப்பது நல்லது, திருடர் பயமுண்டு, முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**மகரம்** சுய முயற்சியில் முன்னேற்றம் பெற வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**தனுசு** தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், தன்னம் பிக்கை துளிர்விடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** சுபகாரியச் செலவுகள் மேலோங்கும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்** தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், ரோக பயமுண்டு.

**கன்னி** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

107

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



யாழ்ப்பாண நீதிமன்றத் தாக்குதலில் 132 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைதாகியவர்களை பொலிஸார் தாக்கியதாகவும் தகவல்.

நீதிமன்றத்தைத் தாக்கியவர்கள் கைது செய்யப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

அதேநேரம் குற்றம் செய்யாத அப்பாவிகளைக் கைது செய்வதென்பது மன்னிக்க முடியாத குற்றம்.ஆயிரம் குற்றவாளி கள் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டனை அனுபவித்துவிடக் கூடாது என்பதே நீதி தர்மம்.

எனினும் நீதிமன்றத் தைத் தாக்காதவர்கள், அந்தப் பக்கமே போகாத வர்களைப் பொலிஸார் கைது செய்தமைதான் கவலைக்குரிய விடயம்.

அதேசமயம் நீதிமன் றத்தைத் தாக்கியபோது அங்கு காவல் கடமையில் இருந்த ஒரு சில பொலிஸார் காயப்பட்டனர் என்ற தகவலை நேற்றைய தொடரில் பிரஸ்தாபித்திருந்தோம்.

பொதுவில் தமது சக உத்தியோகத்தர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் பொலிஸார் கடும் கோபம் கொள்வது வழக்கமாயினும் நடைமுறைக்கு மாறாக, யாழ். நீதிமன்றத் தாக்குதலின்போது பொலிஸார் ஒருவரின் தலையில் கல்பட்டு இரத்தம் கொட்டிய போதும் பொலிஸாரின் கோபம் உடனடியாக வெளிப்படவில்லை என்பதையும் இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

எதுவாயினும் நீதிமன்றத் தாக்குதலை சாட்டாக வைத்து 132 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தின்மீது தாக்குதல்; 132 இளைஞர்கள் கைது என்பன மாணவி வித்தியாவின் படுகொலையைத் தாண்டி முக்கிய செய்திகளாக ஊடகங்களில் இடம்பிடித்துக் கொண்டன.


இவை 20.05.2015 நடைபெற 21.05.2015 அன்று கைதான 132 பேரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்குப் பிணை வழங்கக்கூடாதென யாழ்ப்பாண சட்டத்தரணிகள் வலியுறுத்த, கைதானவர்களை யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்திருப்பதற்குப் போதிய இடவசதியின்மையால் அநுராதபுரத்தில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அநுராதபுரத்தில் மறியலில் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கைதிகள் பொலிஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டு அநுராதபுரம் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதன்போது சிலர் கண்ணீர் விட்டு அழுதனர். தமது பிள்ளைகள் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைக்கு மாற்றப்படுகின்றனர் என்ற செய்தி அறிந்ததும் அவர்களின் பெற்றோர் கவலை மேலீட்டால் கண்ணீர் விட்டனர்.

என்ன செய்வது விதியை யாராலும் தடுக்க முடியாதென்பதாக நிலைமை இருந்தது.





## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

இவை நடக்கின்ற அதே தினத்தில் மாணவி வித்தியாவின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் சுவிஸ் குமார் கொழும்பில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதியின் வாசஸ் தலத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சுவிஸ்குமாரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டியிருந்தாலும் பாதுகாப்புக் காரணமாக யாழ்ப்பாண நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்த வேண்டியதாயிற்று.

ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் போது யாழ்ப்பாண நகரத்தில் எங்ஙனம் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்குமோ அதுபோல 21 ஆம் திகதி, வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேக நபர்களை யாழ்ப்பாண நீதிமன்றுக்குக் கொண்டு வரும் போது பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

21.05.2015 அன்று சந்தேக நபர்களை யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர்படுத்துதல் என்ற செய்தியை மக்கள் அறியாமல் இருந்த போதிலும் யாழ். நகரிலும் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தைச் சுற்றியும் போடப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பைக் கண்ணுற்றபோது சந்தேகநபர்கள் இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றுக்கு வருகிறார்கள் என்ற செய்தியை ஊகிக்க முடிந்தது.

ஆம், வித்தியாவின் படுகொலையையடுத்து முதற்தடவை யாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

132 இளைஞர்களின் கைது அவர்கள் அநுராதபுரம் சிறைக்கு மாற்றம், சுவிஸ்குமாரும் நீதிமன்றில் ஆஜர் என்ற தகவல்கள் வெளியாகிய போது யாழ்.குடாநாடு அமைதியை வலிந்து கடைப்பிடித்தது என்ற உண்மையையும் இவ்விடத்தில் பதிவு செய்வது முக்கியமானதாகும்.

(வளரும்)

-புருசோத்தமன்-



சந்நிதியான் தீர்த்தோற்சவம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்.
புதிய பழக்க வழக்கங்கள். அனுபவங்கள்,
அங்கீகாரங்கள், பொறுப்புக்கள்,
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும், இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Thank You
NEW Uthayaa JEWELLERS
(சி-9045)
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jewellers
uthaya.new

# முகமாலையில் யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகளால் பாரிய சவால்கள்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி முகமாலைப்பகுதியில் யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் பாரிய சவாலாக காணப்படுவதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக யுத்தம் இடம்பெற்ற பகுதியாகவும் யுத்த சூனிய பிரதேசமாகவும் காணப்பட்ட முகமாலைப்பகுதியில் தொடர்ந்தும் வெடிபொருட்களின் அச்சம் காணப்படுகின்றது.

இவ்வாறு இப்பகுதியில் வெடிபொருட்களில் சிக்கி பெறுமதிமிக்க மனித உயிர்கள் செல்லப்படுவதுடன் பலர் தமது உடல் அவயவங்களையும் இழக்க நேரிடுகின்றது.

வெடிபொருட்கள் பற்றிய விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும், இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து மக்கள் விடுபடுவதாக இல்லை எனப்பல்வேறு தரப்புக்களும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு வெடிபொருட்களின் ஆபத்துக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்விடயம் அனைவருமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஓர் விடயமாகும். முகமாலை பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான வெடிபொருட்களை அகற்றும் பணிகளை துரிதமாக செய்ய முடியாத நிலையிலும் அவர்கள் தங்களால் இயன்றளவு முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அதாவது கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் சிலர் மீண்டும் கண்ணி வெடிகளை புதைத்து மக்கள் நடமாட்டத்தை குறைப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுதொடர்பில் சரியான ஒரு முடிவை அல்லது தீர்வை எடுக்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் கண்ணிவெடிஅகற்றும் நிறுவனப்பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கும் போது இந்தப் பகுதிகளில் வெடிபொருட்கள் பெரும் சவால்களாக காணப்படுகின்றன.

இதனைவிட இப்பகுதிகளில் இன்னமும் வெடிபொருட்கள் அகற்றப்படாத மிகவும் ஆபத்தான பகுதிகளில் கைவிடப்பட்ட காவலரண்களில் உள்ள மரக்குற்றிகள், இரும்புகள் என்பவற்றை பலர் எடுத்து வருகின்றனர்.

இதேவேளை கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கும் பகுதிகளில் வெடிபொருட்களின் ஆபத்துக்களுக்கு இடும் பதாகைகள், குறியீடுகள் என்பவற்றையும் சேதப்படுத்தியும் அவற்றை எடுத்தும் செல்கின்றனர்.

இதனால் மறுநாள் பணிக்ளை முன்னெடுப்பதற்கு முன்னர் அதனை சீர் செய்வதற்கு பணியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வெடிபொருள் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய ஆபத்தான பகுதிகளுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு போடப்படவேண்டும் என்ற அவசியத்தை பல்வேறு தரப்பினரும் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# அன்னதான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி வைப்பு



முல்லைத்தீவு மம்மில் பிள்ளையார் ஆலயத்தில் அன்னதான மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் நடப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஶ்ரீஸ்காந்தராசா கலந்து கொண்டதோடு அன்னதான மடத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தார். இதில் ஆலய பிரதமகுரு, ஆலய பக்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அன்னதான மடத்திற்கு 2018 ஆம் ஆண்டிற்குரிய தனது நிதியில் இருந்து ஒரு பகுதியை ஒதுக்கித் தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஶ்ரீஸ்காந்தராசா இதன் போது தெரிவித்தார். (2-250)

# பல்லவராயன்கட்டு அ.த.க.பாடசாலை அடுத்தாண்டு மீளவும் இயங்கும்

## கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள யுத்த காலத்தில் செயலிழந்த பல்லவராயன்கட்டு அ.த.க பாடசாலையை அடுத்த ஆண்டு மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக கல்வியில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தில் உள்ள 112 பாடசாலைகள் யுத்தத்தினால் பாதிப்படைந்திருந்தன.

மீள்குடியமர்வின் பின்னரான அபிவிருத்திகளின் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஆறு பாடசாலைகள் மீளவும் இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த வலயக் கல்விப் பணிப்பாளர் யுத்தத்தினால் மூடப்பட்ட பாடசாலைகளை சென்று பார்வையிட்டுள்ளதாகவும் இதில் பல்லவராயன்கட்டு அ.த.க. பாடசாலையினை அடுத்த ஆண்டு மீள ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறித்த பாடசாலையில் எந்தவித கட்டட வசதிகளும் இல்லை எனவும் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (2)

# கிளிநொச்சி பொதுச்சந்தைக்கான நவீன கடைத்தொகுதிகளை அமைக்க 767 மில்.தேவை

## முதற்கட்டமாக 150 மில்.ரூபா கிடைப்பு–அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பொதுச்சந்தைக்கான நவீன கடைத்தொகுதிகளை அமைப்பதற்கு 767 மில்லியன் ரூபா நிதிதேவையென மதிப்பிடப்பட்டுள்ளதுடன், முதற்கட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு 150 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு கட்டுமானப்பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகரத்திட்டமிடலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி பொதுச்சந்தைக்கான கட்டுமானப் பணிகளும் நகரதிட்டமிடலுக்கு அமைவாக முன்னெடுக்கும் வகையில் அதற்கான கட்டட வரைபுகள் வரையப்பட்டு அதற்கான நிதி மூலங்களைத்தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி சேவைச்சந்தையை பொறுத்தவரையில் இதற்கான கட்டுமானப்பணிகளை ஆரம்பிப்பதற்கு 150 மில்லியன் ரூபா நிதிக்கான அமைச்சரவை அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் 80 மில்லியன் ரூபாவிற்கான கட்டுமானப்பணிகளை 2017ஆம்ஆண்டிலே முன்னெடுப்பதற்கான அனுமதிகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு 150 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்ற நிலையில் கிளிநொச்சி நகரத்துக்கான நீண்ட எதிர்கால நோக்கை அடிப்படையாகக் கொண்டு அதற்கான சந்தையை அமைக்கின்ற திட்டம் வரைபு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான மொத்த நிதி 767 மில்லியன் ரூபாவாகவுள்ளது. இந்நிலையில் இவ்வருடத்திற்கான 80 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக நிதியை பெற்றுக்கொள்கின்ற சவால் இடர்பாடுள்ளது. அதற்கான நிதிகளை மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்களினூடாக எடுக்கவேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)



கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற போது... (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# கனகராயன்குளம், மன்னகுளம் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(கண்டாவளை)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது. இதனைக்கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு கனகராயன்குளம் மன்னகுளம் ஆகிய பகுதிகளில் அண்மைய நாட்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போதைய வரட்சி காரணமாக காட்டு யானைகள் ஊர் மனைக்குள் புகுந்து பெரும் பயிரழிவுகளையும் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றன என குறிப்பிட்டுள்ள இப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் ஓர் அச்சநிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். மாலை வேளைகளில் அயல் கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் கூட ஆபத்தான நிலையில் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

### இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்காத ஜனாதிபதி

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு எவ்வாறு நீதியைப்பெற்றுக் கொடுக்கப் போகின்றார்



## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கேள்வி

(குருமன்காடு)

இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டேன் எனக் கூறும் ஜனாதிபதி எந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊர்வலத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கையளிக்கப்பட்ட மகஜரைப் பெற்றுக் கொண்ட பின்னரே ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

இன்று (நேற்று முன்தினம்) 193 நாட்களாக வடக்கிலும், கிழக்கிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார் அகிம்சை வழியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நல்லாட்சி அரசாங்கம் இந்த மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது எங்கள் எல்லோருக்கும் கவலை அளிக்கக் கூடிய விடயம். வவுனியா மாவட்டத்தில் இருந்து 8 ஆயிரம் பொது மக்கள் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும் என தனித்தனியாக ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதங்களில் ஒரு கடிதத்திற்கு கூட பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு அரசாங்கம் பதில் அனுப்பவில்லை.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய 66 ஆவது மாநாட்டில் ஜனாதிபதி இந்த நாட்டின் உடைய எந்தவொரு இராணுவ வீரரை உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி காட்டிக் கொடுக்க மாட்டேன் என ஆணித்தரமாகவும், உறுதியாகவும் கூறியிருக்கின்றார். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் பலர் இறுதி யுத்தின் போது இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள். இந்த நிலையில் இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டேன் எனக் கூறும் இந்த ஜனாதிபதி எந்தவகையில் நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றார் என்ற பலத்த சந்தேகங்கள் எழுகின்றன.

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் கூட இலங்கை அரசாங்கம் இணங்கிக் கொண்டதன் அடிப்படையில் தான் காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் திறக்கப்பட வேண்டும். காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கான விசாரணைகள் இடம்பெற வேண்டும். சர்வதேச நீதியாளர்கள், சட்ட ஆலோசகர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை மீறும் வகையில் தான் ஜனாதிபதியினுடைய உரை அமைந்திருக்கின்றது.

இது ஒரு பாரதூரமான விடயம். பரணகம ஆணைக் குழுவில் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக முறையிடப் பட்டுள்ளது. இரண்டரை வருடங்கள் கடந்தும் இந்த அரசாங்கம் எந்தவொரு நட வடிக்கையும் எடுக்காத இந்த நிலையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தொடர்ச்சியாக இந்த அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவது தொடர்பாக நாங்கள் பல தடவை பேசியிருக்கின்றோம்.

கூட்டமைப்பினுடைய தலைவர்களும் இருக்கின்ற போது தான் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். இது தொடாடபாக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (2-250)

# மியன்மாரின் இனச் சுத்திகரிப்பை கண்டித்து மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் மனித குலத்திற்கு எதிரான மியன்மார் அரச பயங்கர வாதத்தின் இனச் சுத்திகரிப்பு செயற்பாட்டை கண்டித்து மன்னாரில் ஜனநாயக போராட்டம் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நேற்று மனனார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக 10.30 மணியளவில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மியன்மாரில் ரோஹி ஞ்யா முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதாபிமானமற்ற செயற்பாட்டை வன்மையாக கண்டித்தும், இனச்சுத்திகரிப்பு செயற்பாட்டை கண்டித்தும், அந்த மக்களின் வாழ்வுரிமையினை பாதுகாக்கும் வகையிலும், சர்வதேசத்திற்கு அழுத்தத்தை கொடுக்கும்வகையிலும் குறித்த போராட்டம் நடைபெற்றது.

குறித்த போராட்டத்தில் மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்ஹுனைஸ் பாரூக், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆர்.குமரேஸ், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் என். நகுசீன், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மாட்டின் டயஸ், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனி மார்க் , பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட சுமார் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் அழுத்தத்தை கொடுக்கும் வகையிலும் பதாதைகளை ஏந்தியவாறு ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# கட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

வவுனியாவில், பூவரசங்குளம் இராமயன்கல் பகுதியில் கட்டுத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம்இரவு 11.30 மணியளவில குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சட்டவிரோதமாக பதிவுகளின்றி கட்டுதுவக்கு வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர்கைது செய்யப்பட்டுள்ளார்.

பூவரசங்குளம் இராமயன்கல் பகுதியில் உள்ள குறித்த நபரின் வீட்டிற்கு சென்ற பொலிஸார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள் ஏதுமின்றி சட்ட விரோதமாக கட்டுத்துவக்கு ஒன்றை வைத்திருந்ததன் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை உதயகுமார் (வயது-42) என்பவரே இவ்வாறு கட்டுதுவக்குடன் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)




# மக்கள் குடியேறியுள்ள இடங்களில் புதையுண்ட நிலையில் வெடிபொருட்கள்

## அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர்

(கண்டாவளை)

முல்லைத்தீவு இரணைப் பாலைப் பகுதியில் மக்கள் குடியேறியுள்ள பகுதிகளில் தற்போதும் ஆபத்தான வெடி பொருட்கள் காணப்படுவதாகவும் இதனால் அச்சத்துடன் வாழும் நிலை காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் தற்போதும் காணிகளை துப்புரவு செய்யும் போது மிகவும் ஆபத்தான வெடிபொருட்கள் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் தங்களுடைய தென்னந் தோட்டத்தினை துப்புரவு செய்த போது வெடிக்காத நிலையில் குறித்த எறிகணைகள் மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்டதாகவும் இவ்வாறு பல்வேறு இடங்களிலும் ஆபத்தான வெடிபொருட்கள் காணப்படுகின்றன என்றும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதுடன் அச்சத்துடன் வாழும் நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வெடி பொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் பிரதேச செயலகம் மற்றும் கிராம அலுவலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்குமாறு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு இது தொடர்பான பதாகைகளும் விளம்பரங்களும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2-315)

# விதை நெல் உற்பத்தி திட்டம் முள்ளியவளையில் வெற்றியளிப்பு



இவ்வருட மாகாணகுறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியீட்டத்தின் கீழ் தரமான விதைநெல் உற்பத்தி திட்டமானது 2017ம் ஆண்டு சிறுபோகத்தில் முள்ளியவளை உடையார்கட்டுவிவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த செயற்றிட்டம் வெற்றியளித்ததைமுன்னிட்டு முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் முறிப்பு கிராமத்தில் கடந்த மாதம் 31 ஆம் திகதி நெல் அறுவடை விழா நடைபெற்றது என முல்லைத்தீவு மாவட் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

கடந்த போகங்களில் ஏற்பட்ட கடுமையான வரட்சியான நிலைமையில் மாவட்டத்தில் நெற்செய்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. எதிர்வரும் காலபோகத்தில் விதை நெல்லிற்கான தட்டுப்பாடு ஏற்படும் என எதிர்வு கூறப்படும் நிலையில் குறித்த செயற் திட்டத்தினூடு முள்ளியவளை விவசாயப்போதனாசிரியர் பிரிவில் 03 மாத வெள்ளைநிற Bg-300-300 புசல், 3.5மாத சிவப்புநிற At-362 700 புசல் என மொத்தமாக 1000 புசல் விதை நெல் அறுவடைசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வயல் விழா நிகழ்வானது முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் தி. லிசோவின் தலைமையில் இடம்பெற்றது. இதில் திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயிகள் எனப்பலரும் கலந்துசிறப்பித்தனர்.

முறிப்பு பொதுநோக்கு மண்டபத்தில் 26.04.2017 இல் நடைபெற்ற விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வில் பயனாளிகளுக்கான விதைநெல் வழங்கப்பட்டு விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினரின் தொடர்ச்சியான கண்காணிப்பில் விதை உற்பத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது என முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் தெரிவித்தார். (2)

# ஆட்டோ- மோ. சைக்கிள் விபத்து; பொலிஸார் காயம்



வவுனியா நகரப்பகுதியில் நடைபெற்ற விபத்துச் சம்பவமொன்றில் பொலிஸார் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெரு வழியாக ஏ-9 வீதியை நோக்கி பயணித்த ஆட்டோ ஏ-9 வீதியில் வவுனியா நகரில் இருந்து மூன்றுமுறிப்பு நோக்கிச் சென்ற பொலிஸாரின் மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

ஏ-9 வீதி வழியாக பயணித்த ஆட்டோ ஒன்று இரண்டாம் குறுக்குத்தெரு சந்திப் பகுதியில் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது அதற்கு வழி விடும் வகையில் குறித்த ஆட்டோ செயற்பட்ட போதே மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்துக் குள்ளானது.

இதில் காயமடைந்த பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர் பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (2-250)

# உறங்கு நிலையில் இருக்கும் உடற்கல்வி கற்கைநெறியினை மீளவும் ஆரம்பியுங்கள்

போற்றுதற்கும் பெருமதிப்பிற்குமுரிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், துறைசார் பீடாதிபதிகள், துறைசார் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மூதவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், அனைவருக்கும் சிரம் தாழ்த்திய வணக்கங்கள்.

எம் இனத்தின் கல்விக்காக தாங்கள் ஆற்றிவரும் பணிபோற்றுதற்குரியது. தாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாணவர் சமூகத்தை நெறிப்படுத்தி ஆளுமை மிக்க மாணவர்களை உருவாக்குவதற்காக தாங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் மகத்தானவை.

மாணவர்கள் வேகமாக முன்னேறிவரும் இன்றைய ஆரோக்கியமான நிலைக்கு வித்திட்டவர்களும் தாங்களே. எமது தேசிய அடையாளத்திற்கு அடித்தளமான மொழி, க்லை , கலாசார, விளையாட்டு விழுமியங்களை அழியவிடாது பாதுகாக்கும் உன்னத செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் தங்களிடமே உள்ளது.

இந்நிலையில் கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக யாழ்.பல்கலைக்கழகத்தில் தீர்க்கப்படாமல் இருக்கின்ற விடயம் ஒன்றினை தங்கள் அனைவரினதும் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகின்றேன். சமூகத்தில் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வியாளர்களாக இருக்கின்ற நீங்கள் இவ்விடயத்திற்கு உரிய தீர்வின்ன பெற்றுத்தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தொடர்கின்றேன்.

இடையறாத கல்வியும் தவறவிடப்படக் கூடாத பரீட்சைச்சித்தியுமே என்று விளங்குகின்ற யாழ்ப்பாண கல்விச் சூழலில் விளையாட்டின் ஊடாகவும் மாணவர்கள் உயர்கல்வியினை பெற்றுக் கொள்ளக்கூடிய வாறு யாழ்.பல்கலைக்கழகத்தில் 1998 ஆம் ஆண்டு உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை முன்னை நாள் துணை வேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ஆரம்பித்து வைத்திருந்தார்கள். அனைத்து மாணவர்களிற்கும் ஏதோ ஒரு வகையில் பல்கலைக்கழகக் கல்வி சென்றடைய வேண்டும் என்ற கொள்கையில் முன்னைநாள் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இக்கற்கை நெறியானது இலங்கையிலேயே விளையாட்டுத்துறை உயர்கல்விக்காக பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட முதலாவது கற்கை நெறியாகக் கருதப்பட்டது.

முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சனி சிவாஸ்கரன் அவர்களுடைய ஒருங்கிணைப்பிலும் பன்முகப்படுத்தப்பட்ட சிறப்பான திட்டமிடலிலும், மருந்துவபீட விரிவுரையாளர்கள், முகாமைத்துவபீட விரிவுரையாளர்கள், உடற்கல்வி விளையாட்டுத்துறை விரிவுரையாளர்கள், துறைசார் விளையாட்டு பயிற்றுநர்கள் ஆகியோர் இணைந்த வகையில் இக் கற்கைநெறியினை மிகச் சிறப்பாக முன்னகர்த்தி வந்தார்கள்.

1998 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கற்கைநெறி 2013 ஆம் ஆண்டு வரை பலநூற்றுக்கும் மேற்பட்ட விளையாட்டு டிப்ளோமா பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. இவ் டிப்ளோமா பட்டதாரி மாணவர்களில் உயர் கல்வியினை பெற்றுக் கொண்ட பல மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். 95 விகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். இந் நியமனத்திற்குப் பின்னரே வடமாகாண விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தேசிய ரீதியாக போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. எதிர்பார்ப்பிற்கு மிஞ்சிய பல புதிய சாதனைகள் பதிவு செய்யப்பட்டன.

1998 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்த உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக எவ்வித கற்பித்தல் செயற்பாடுகளும் இல்லாமல் உறங்கு நிலையில் இருக்கின்றது. இக் கற்கை நெறியின் தொடர்ச்சியாக 2008 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட உயர் டிப்ளோமா கற்கை நெறியும் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இக் கற்கைநெறிக்காக உடற்கல்வித் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற மூன்று நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் அவர்களுடைய கல்வி அறிவு எம்மாணவர் சமுதாயத்திற்கு கிடைக்க முடியாமல் இக் கற்கைநெறி தடைப்பட்டிருக்கின்றது.

கடந்த நான்கு வருடத்திற்கு மேலாக எவ்வித கல்விச் செயற்பாடுகளும் இல்லாமல் உடற்கல்வி கற்கை நெறிக்காக நியமனம் பெற்றிருக்கின்ற இவர்களுடைய செயற்திறனும் பாதிக்கப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் மாணவர்கள் செலுத்திய கல்விக் கட்டணங்களின் உதவியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கற்கை நெறி தற்போது உறங்கு நிலையில் இருக்கும் போது பெரும எவு அரச நிதி செலவு செய்யப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக பாடத்திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை, கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்திற்கு இக் கற்கை நெறியினை மாற்றம் செய்ய விரிவுரையாளர்கள் விரும்புகிறார்கள் இல்லை என்ற தேவையற்ற காரணங்களைத் தெரிவித்து கால இழுத்தடிப்புக்களே மேற்கொள்ளப்பட்டன.

உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இக்கற்கை நெறியின் பழைய மாணவர்களாகிய வடமாகாண உடற் கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் சங்கத்தினர் எடுத்த நல்லெண்ண முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

பெருமதிப்பிற்குரிய யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரே!

மிகக் குறுகிய காலத்தில் கல்வியின் எல்லை வரை பட்டம்பெற்ற பல இளம் வயதினர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகளாக, துறைசார் தலைவர்களாக, சிரேஷ்ட விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். கல்விக் காலங்களில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு புகழ்சேர்த்த, விளையாட்டுத்துறையில் அனுபவம் வாய்ந்த பிரபல்யமான பல பயிற்றுவிப்பாளர்கள் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறையில் பயிற்றுவிப்பாளர்களாக நியமனம் பெற்றிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து செயற்குழு ஒன்றினை நியமித்து மிக விரைவாக இப் பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்று உறங்கு நிலையில் இருக்கும் இக் கற்கைநெறியினை மீளவும் ஆரம்பித்து விளையாட்டுத்துறையில் தம் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களின் உயர்கல்விக்கு உதவுமாறு தங்கள் அனைவரிடத்திலும் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் ஜனாதிபதியையோ அல்லது கல்வி அமைச்சரையோ அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவரையோ சந்திப்பதில் பெரும் சிரமங்களோ அல்லது இடர்பாடுகள் எவையும் இருப்பதாகவோ தெரியவில்லை.

பொறியியல் பீடங்களிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மொறட்டுவ பல்கலைக் கழகங்களில் கல்வியைத் தொடரும் போதும், விவசாய பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் கல்வியைத் தொடரும் போதும் உடற்கல்வி கற்கைநெறி மட்டும் கிளிநொச்சி வளாகத்தில் இயங்குவதில் துறைசார் விரிவுரையாளர்கள் விரும்புகிறார்கள் இல்லை எனக் கருதுவது ஏற்புடையது அல்ல.

புதியபீடங்கள் உருவாக்கப்படுவதும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதும் வரவேற்கப்படக் கூடிய விடயமாக இருக்கின்ற அதேவேளை பழைய வளங்களையும் அழியவிடாமல் பாதுகாப்பதற்கு ஏற்ற முயற்சிகளையும் தாங்கள் முன்னெடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் மாணவர் சமுதாயம் இருக்கின்றது.

எவர் மனதையும் புண்படுத்துவதோ குற்றம் காண்பதோ எனது நோக்கமல்ல. அவ்வாறு எவர் மனதையாவது இவ் எழுத்துக்கள் புண்படுத்தியிருந்தால் அதற்காக மனம் வருந்துகின்றேன்.

கல்வி அறிவைக் கொடுத்த தங்களையும் மாணவர் சமுதாயம் என்றும் போற்றி வணங்கும்.

தாங்கள் புரிந்துணர்விற்கு நன்றி!
நாகராஜா விஜயகுமார் - சுவிட்சர்லாந்து
உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி
முதலாம் அணி மாணவர் மன்றத்தலைவர்
மாணவர் பதிவு இலக்கம் - 98 PE 39

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குடற்புண் (குன்மம்) நோயில் பயன்படும் மூலிகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த மருத்துவத்தில் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பூதங் களுக்கொப்ப இவ்வுல கமும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூத ங்களால் ஆனதெனக்கண் டனர். நிலம் திடபதார்த்த மாய் உள்ளதால் எத்திக் கிலும் பரவுவதில்லை. நீர் திரவ பதார்த்தமாதலால் தன்னை உட்கொண்டுள் ளவற்றின் வடிவை ஏற் கும் தன்மையுடையது. தீ மூன்று திக்கிலும் பரவும் தன்மையுடையதால் நீரிலும் கூடுதலாக பரவும் தன்மை யுடையது. வாயு முற்கூறிய மூன்று பூதங்களைக் காட் டிலும் அதிகமாக பரவும் தன்மையுடையது.

ஆனால் ஆகாயம் எல்



லாப் பூதங்களையும் விட அதிகமாக பரவும் தன்மை யுடையது. பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பூத ங்களும் பல்வேறு அளவு களில் அமைந்துள்ளன. மேற்படி சுட்டுறவில் ஒன்று அல்லது மற்றொன்றின் மிகுதியால் நம்மைச் சுற் றியுள்ள பொருட்கள் பல் வேறு வடிவங்களைப் பெற் றுள்ளன. மருத்துவ உபயோ கத்திற்காக இவ் ஐந்து பூத ங்களும் மூன்றாக இணை க்கப்பட்டுள்ளன. "வாதம்" வாயுவோடு ஆகாயத்தை யும் மற்றைய பூதங்களை மிகச்சிறிய அளவிலும் பெற் றுள்ளது. "பித்தம்" அதிக தீயுடன் குறைந்த நீரையும் மற்றைய பூதங்களின் சிறு அளவையும் பெற்றுள்ளது.



"கபம்" அதிக நீருடன் குறை ந்த நிலத்தையும் மற்றைய பூதங்களின் சிறு அளவை யும் பெற்றுள்ளது.

நிலத்தால் வாசனை யும் நீரால் ருசியும் தீயால் நிறமும் காற்றால் ஸ்பரிச மும் ஆகாயத்தால் சப்த மும் உண்டாகும். சுவை ஆறு வகைப்படும். இனி ப்பு, புளிப்பு, கைப்பு, உவர் ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன.

இவற்றில் இனிப்பு 6 வீத பலத்தையும் புளிப்பு 5 வீத பலத்தையும் கசப்பு 4 வீத பலத்தையும் உவர்ப்பு 3 வீத பலத்தையும் துவர்ப்பு 2 வீத பலத்தையும் கார்ப்பு 1 வீத பலத்தையும் கொடுக்கும். வாதத்தை இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு பதார்த்தங்களும் பித்தத்தை இனிப்பு, கைப்பு, துவர்ப்பு பதார்த்தங்களும் பித்தத்தை இனிப்பு, கைப்பு, துவர்ப்பு பதார்த்தங்களும் கபத்தை கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு பதார்த்தங்களும் அடக்கக்கூடியனவாகும்.

ஆனால் எதிரான சுவையு ள்ள பதார்த்தங்கள் அவை களை விருத்தி செய்யக்கூடி யன. இப் பதார்த்தங்கள் மீண்டும் உஷ்ணம், குளிர் ச்சி என இரு வகையான குணங்களையுடையன என பிரிக்கப்படும்.


எனவே குடற்புண் அல் லது குன்மம் எனப்படும் நோய் நிலைமையானது பித்த தோஷம் அதிகரிப்பதால் ஏற்படுகின்றது. எனவே அந் நிலைமையில் குளிர்ச்சியான, சீத வீரியமுள்ள உணவுக ளையும் மருந்துகளையும் உட்கொள்ள வேண்டும்.

- மாதுளம் பழச்சாறு தினமும் 200 மில்லி அளவு அருந்திவர வேண்டும்.
- வில்வம் பழத்தை எடு த்து ஓட்டை உடைத்து சதையை எடுத்து சர்க்கரை சேர்த்து பிசைந்து காலையில் மட் டும் சாப்பிட்டு வந்தாலும் குடற்புண் ஆறும்.

குடற்புண்ணிற்கு பிரண் டையிலிருந்து எடுக்கப்ப டும் உப்பு சிறந்த மருந்தா கும். இதற்கு நிறைய பிர ண்டைக் கொடிகளை சேக ரித்து உலர்த்தி அதனை சுத்தமான சீமெந்து தரை யில் போட்டு எரித்து அந்தச் சாம்பலை நீரில் கரைத்து தெளிவித்து அதனை காய்ச்சி குழம்பு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் விட்டு வெயி லில் வைக்க பிரண்டை உப்பு பெறப்படும். இதில் 200 மில்லி கிராம் அளவு வெந் நீருடன் கொடுத்துவர குடற் புண் ஆறும்.

- ஏலம்-30 கிராம்

பொரித்த சீரகம்- 30 கிராம் இரண்டையும் சேர் த்து 8 பங்கு நீர்விட்டு 1/8



பங்காக சுண்டக்காய்ச்சி 30-60மில்லி அளவு காலை, மாலை குடித்து வந்தாலும் குடற்புண் ஆறும்.

- அகத்திக் கொழுந் தில் சொதி வைத்து சாதத்து டன் சாப்பிட்டு வரவும் குடற் புண் ஆறும். மிளகு தக் காளி இலைகளையும் பழ த்தையும் மென்று சாப்பிட்டு வந்தாலும் குடற்புண் ஆறும்.



- சிறிதளவு தண்ணீரில் அதிமதுர வேரை நைய இடித்து இரவு முழுவதும் ஊற வைத்து காலையில் வடித்து குடித்து வந்தாலும் குடற்புண் ஆறும்.
- சின்னச் சீரகத்தை ஒரு மண்சட்டியில் போட்டு அது மூழ்கும் வரை எலு மிச்சம் பழச்சாறு விட்டு வெயி லில் வைக்க வேண்டும். சாறு முழுவதும் சீரகத்தில் சுவறியதும் சீரகத்தை உல ர்த்தி பொடித்து அரித்து வைத்துக்கொண்டு 1-2 கிராம் அளவு வெந்நீரில் சர்க்கரை கலந்து காலை, மாலை 48 நாட்கள் சாப் பிட்டு வந்தாலும் குடற்பு ண்ணும் அதனால் ஏற்ப டும் வயிற்று வலியும் நீங் கும்.
- மிளகு தக்காளி இலை, பழம், சீரகம், ஏலம், கொத் தமல்லி, பெருங்காயம் தேவை யானளவு உப்புச் சேர்த்து சூப்பாக தயாரித்து பருகி வந்தாலும் குடற்புண் ஆறும்.
- தினமும் கறுப்பு திரா ட்சை பழச்சாறு 200 மில்லி அளவு அருந்தி வந்தாலும் குடற்புண் குணமாகும்.

கறிமஞ்சளை தணலில் இட்டு சுட்டு சாம்பல் ஆகும் வரை எரித்து 1 கிராம் சாம் பலை தேன் கலந்து சாப்பி ட்டு வந்தாலும் குடற்புண் ஆறும். நெற்பொரிக்கஞ்சி, இலைக்கஞ்சி, வெந்தயக் கஞ்சி போன்றவற்றை தாரா ளமாக பயன்படுத்தலாம். காரம், எண்ணெய் சேர் ந்த பண்டங்களை தவிர்த் துக் கொள்ளல் வேண்டும். மோர் தாராளமாக பயன் படுத்தலாம். விரைவுண வுகளை தவிர்த்துக் கொள் ளல் வேண்டும்.


நேரத்திற்கு உணவு சாப் பிடல் வேண்டும். அதிக சூடான, அதிக குளிரான பானங்கள் அருந்துதலை தவிர்த்துக்கொள்ள வேண் டும். அறுகன்சாறு சேர் ந்த திரவமான காய்ச்சப்ப ட்ட சவ்வரிசி சேர் பாயாசம் அருந்தலாம்.

இலைவகைகளை இய ற்கை உணவாக எடுக்க வேண்டும். அதாவது நெரு ப்பிற்கு போகாது துவை யல், பச்சடி போன்றன செய்து பயன்படுத்தலாம். இதற்கு தாராளமாக கொவ்வை இலை, புதினா, சாத்தாவாரி இலை, மிளகு தக்காளி, அகத்தி, ஆரைக்கீரை போன்றவற்றை பயன்ப டுத்தலாம். வில்வம்பழம், விளாம்பழம் போன்றவற்றை சர்க்கரை சேர்த்து சாப்பிட லாம். உடன் இறக்கிய செவ் விளநீர் அருந்தலாம். அத் திப்பிஞ்சில் கறி சமைத்துச் சாப்பிடலாம். அத்திக்காய் களுக்கு குடற் புண்ணை ஆற்றும் தன்மை உண்டு.

குடற்புண் நோய் உள் ளவர்கள் மலச்சிக்கல் ஏற் படாமல் கவனித்துக்கொ ள்ள வேண்டும்.



நெல்லியடி பொலிஸாரின் நடமாடும் சேவை தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க கலந்து கொண்டார். வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், வட மராட்சி மரண விசாரணை அதிகாரி பாஸ்கரன், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி, கரவெட்டி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 25 கர்ப்பிணித்தாய்மார்களுக்கு உணவுப் பொதிகளும், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பொது மக்களுக்கு தென்னங்கன்றுகளும் மற்றும் பல உதவிகளும் வழங்கப்பட்டன. (படங்கள்:- மகாலிங்கம்)



வடலியடைப்பு புத்ரானை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் 4 ஆம் திகதி இடம்பெற்றது. (படங்கள்:- சரவணன்)

## திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் புனித திருச்சொரூப பவனியும்

இளவாலை புனித அன்னாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பாண்டியன் தாழ்வு பங்குத்தந்தை அருட்பணி ஏ.ஜெ.மௌலிஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து காலை 9 மணிக்கு புனித அன்னாளின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-10-104)



யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் அமைந்துள்ள தேசோதய சபையின் பிரதேச காரியாலயம் அண்மையில் சர்வோதயத்தின் செயலாளர் வின்னி ஆரியரட்னவால் யாழ்.நாவலர் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.


## 'வாழ்வுதந்த வாஸ்' வரலாற்று நாடகம் மீண்டும் யாழில்

(யாழ்ப்பாணம்)

புனித ஜோசப்வாஸ் ஆண்டினை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற 'வாழ்வு தந்த வாஸ்' என்னும் வரலாற்று நாடகம் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இந்நாடகம் இதற்கு முன்பு கடந்த ஜூன் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டதுடன், கடந்த மாதம் 20 ஆம் திகதி புதுக்குடியிருப்பிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கரவெட்டியில்



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் சார்ந்த வேலை த்திட்டங்களின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் சி.ராஜீவ், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பா. நிர்மலன், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர் சி. உதயமதி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-3-60)




நல்லூர் பிரதேச மூத்தோர் பேரவையினால் நல்லூர் பிரதேசத் திற்குட்பட்ட முதியவர்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. (இ-3)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் ஜெ.அஜீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உப தலைவர் ச.சத்தியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-106)

## பக்திப் பாடல் இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய் ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சங்காபிஷேகம், 20 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு பக்திப்பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு என்பன இடம்பெற்றுள்ளன. (இ-3)



நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் தெய்வீக உரை நிகழ்த்தியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சைவத்தலைவர் சிவஸ்ரீ.குமாரசாமி சுமுகலிங்கம் உரையாற்றுவதையும் வடமாகாண கல்வித் திணைக்கள சிரேஷ்ட செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் சான்றிதழ் வழங்குவதையும் காரை மணிகண்டன் பொன்னாடை போர்த்துவதையும் சிவகுரு இளங்கோவிற்கு சமாதான நீதவான்கள் அமைப்பின் காரைநகர் பிரதேச அமைப்பாளர் கலாநிதி சுகசபை சுந்தரலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# பொன்சேகாவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை



(கொழும்பு)

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவர கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இராணுவத்துக்கு எதிராக அவர்வெளியிட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் பிரதி இணைப்பாளர் நாடா ளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா இதனைத் தெரி வித்துள்ளார்.

நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் ஐ.தே.க. அமைச்சர் களுக்கு எதிராக கூட்டு எதி ரணி நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டு வரும் நிலையில் சரத் பொன் சேகாவிற்கு எதிராகவும் தற் போது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முடிவெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை போர்க்கப்பல்கள் விசாகப்பட்டணத்திற்கு விரைவு



(கொழும்பு)

இந்தியக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிகளை மேற் கொள்வதற்காக, கடற்படை யின் இரண்டு பாரிய போர்க் கப்பல்கள், நேற்று முன் தின விசாகப்பட்டணத்திற்குப் புறப் பட்டுச் சென்றுள்ளன.

SLINEX 2017 என்ற பெயரில் ஆண்டு தோறும் நடத்தப்படும் கூட்டுப் பயிற்சி யில் பங்கேற்பதற்காக, இலங் கையின் கடற்படையின் ஆழ் கடல் ரோந்துக் கப்பல்களான, சயுர மற்றும் சாகர ஆகியன நேற்றுமுன்தினம் திரு கோணமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றன.

இவை இன்று விசாகப் பட்டணம் துறைமுகத்தைச் சென்றடையும். நாளை 7ஆம் திகதி தொடக்கம், 14ஆம் திகதி வரை இந்திய-இலங்கை கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி இடம்பெறும்.

43 அதிகாரிகள், உள் ளிட்ட 368 இலங்கைக் கடற் படையினர் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க இந்தியா சென்றுள்ளனர். (இ-7)

# ராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவை நாட்டு மக்கள் பாராட்ட வேண்டுமாம்

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவை நாட்டு மக்கள் பாராட்ட வேண் டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

நனிப்பட்ட பிரச்சினை களைத் தீர்த்துக் கொள்வதற் காக, முன்னாள் இராணுவத் தளபதிகள், இராணுவத்தின் பெயரைக் கெடுத்துக் கொள் ளக்கூடாது என்று இராணு வத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க கூறி யிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ஷ,

"முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெயசூரிய மீது, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றச்சாட்டு களை சுமத்தியுள்ள வேளை யில், பாதுகாப்புப் படைகளின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்று தற்போ தைய இராணுவத் தளபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்காக இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக் கவை நாட்டு மக்கள் பாராட்ட வேண்டும்.

போர்க்குற்றங்களுக்கு ஜெனரல் ஜெயசூரியவே பொறுப்பு என்று கூறிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வுக்கு எதிராக, நாடளாவிய ரீதியில், கூட்டு எதிரணி பரப் புரைகளை ஆரம்பித்துள் ளது.

சரத் பொன்சேகாவின் அவதூறான கருத்துக்கள் படையினரை வெறுப்படையச் செய்துள்ளது" என்றும் மகிந்த கூறியுள்ளார். (இ-7)

# பொன்சேகாவிடமிருந்து பீல்ட் மார்ஷல் பட்டத்தை பறியுங்கள்- வாசுதேவ



சரத் பொன்சேகாவிடம் இருந்து பீல்ட் மார்ஷல் பட் டத்தை பறித்து. அமைச்ச ரவையை விட்டு அவரை வெளியேற்ற வேண்டும்என்று கூட்டு எதிரணி வலியுறுத்தி யுள்ளது.

கூட்டு எதிரணியின் நாடா ளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார இது குறி த்து செய்தியாளர்களிடம் கூறுகையில்,

'முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெய சூரியவுக்கு எதிராக, பொருத் தமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்திய, பிராந்திய அபிவி ருத்தி அமைச்சர் சரத் பொன் சேகாவை அமைச்சரவை யில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

அவருக்கு வழங்கப்பட்ட பீல்ட் மார்ஷல் பட்டத்தையும் பறித்துக் கொள்ள வேண்டும்.

சரத் பொன்சேகாவை அமைச்சரவையில் பாதுகாக் கக் கூடாது' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எப்போதும் கதவைத் தட்டிவிட்டு...

நம்மில் பலருக்கும் இன்னும் இந்தப் பழக்கம் வரவில்லை.

விருட் விருட் என்று கதவைத் திறந்து கொண்டு நுழைந்து விடுகிறார்கள்.

எவ்வளவு நெருங்கிப் பழகினவர்களின் வீடாக இருந்தாலும் சரி, கூடப் பிறந்தவர்களின் அறையாக இருந்தாலும் சரி, கதவைத் தட்டிவிட்டுக் காத்திருக்க வேண்டும்.

யாரது? என்ற குரலோ கம் இன் என்ற அழைப்போ கிடைத்த பின்பே (பதிலிறுத்திவிட்டு) நுழைய வேண்டும். நான் ஆரம்பத்தில் திடீர் திடீர் என்று தான் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்து கொண்டிருந்தேன். இப்பொழுதெல்லாம் அப்படி இல்லை. எப்போது என்னை மாற்றிக் கொண்டேன் என்பதையே நினைவுக்குக் கொண்டுவர இயலாதபடி பல வருடங்களுக்கு முன்பு இந்தப் பழக்கத்தை ஆரம்பித்து விட்டேன். இன்னமும் என் சகோதரிகள் வீட்டிற்குப் போனால் கூட மணி அடித்துவிட்டு வாசலிலேதான் நிற்கிறேன். இன்று என் வீட்டில் அனைவருக்கும் இந்தப் பழக்கம் வந்துவிட்டது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமில்லாமல் பணிபுரிகிறவர்கள் கூட இந்தப் பழக்கத்தை பின்பற்றுகிறார்கள். மிக நன்றாகவும் நாகரீகமான பழக்கமாகவும் இருக்கின்றது.

சிலபேர் தெரிந்தவர்களின் வீடுகளில் நுழைந்து நேரிடையாக அடுக்களை வரையிலும் – ஏன் படுக்கை அறைவரையும் கூட நேரே வந்துவிடுகிறார்கள். என்னங்க இப்படி விளக்கம் கேட்டால் அந்த அளவுக்கு நான் நெருங்கிப் பழகிவிட்டேன் என்கிறார்கள் வெட்கத்தை மறந்துவிட்டு.

எவ்வளவு நெருங்கிப் பழகியவர்கள் என்றாலும் இப்படி நுழைவதை எவரும் விரும்புவது இல்லை. நாகரிகம் கருதி இதை அவர்கள் சுட்டிக்காட்டுவது இல்லை.

மாறாக நின்றும் தயங்கியும் தெரிவித்து விட்டும் நுழைந்தால் நம்மை அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போய் விடுகிறது.

என்னங்க நீங்க? என்னமோ நம்ம வீட்டுக்கு இப்பத்தான் புதுசா வர்றவுங்க மாதிரிக் கதவைத் தட்டிக்கிட்டு வாசலிலேயே நின்னுக்கிட்டிருக்கீங்க! என்று சொல்லுகிறவர்கள் கூட உள்ளுக்குள் இப் பழக்கத்தை மிகவும் விரும்புகிறார்கள்.

திடீர் என்று அறிவிப்பு இல்லாமலும் ஒருவர் ஏன் இன்னொருவரின் அறைக்குள்ளோ ஒரு வீட்டிற்குள்ளோ நுழையக் கூடாது என்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன.

முதல் காரணம் அவர்கள் என்ன கோலத்தில் இருப்பார்களோ என்பது நமக்குத் தெரியாது. இன்னொன்று தங்களுக்கே உரிய விடயங்களைப் பேசிக் கொண்டிருக்கும் மூன்றாமவர்கள் நுழைவதை எவரும் விரும்புவது இல்லை. மூன்றாவது ஏதோ ஒரு நினைப்பிலும் பேச்சிலும் இருக்கும் அவர்களுக்கு ஒரே நொடியில் முற்றிலும் புதியவர்களை அல்லது தெரிந்தவர்களை வரவேற்கும் மனநிலையில் இருப்பதில்லை. இருக்கும் மனநிலையிலிருந்து மாற அவர்களுக்குச் சிறு அறிவிப்பும் சில நொடிகள் அவகாசமும் தேவைப்படுகின்றன. இதற்குத் தான் அந்த டொக் டொக்கும் மணி அறிவிப்பும்.

இது பலருக்கு மிகச் சாதாரணமான விடயமாகத் தெரியலாம்.

ஆனால் இப்பழக்கம் நமக்குப் பல வகையிலும் பாதுகாப்பானது என்பதை நடைமுறையில் கொண்டு வருபவர்கள் உணர்வார்கள்.

லேனா தமிழ்வாணன்



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

# புதிய அரசியல் அனுபவத்தை கூட்டரசு நாட்டுக்கு வழங்கியது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

எவர் எதனை கூறினாலும் கூட்டரசாங்கத்தின் கடந்த இரண்டரை ஆண்டு கால பயணம் வெற்றிகரமானதென ஜனாதிபதி தெரிவித்தார். நாட்டில் பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் முதன்மை கட்சிகள் இரண்டும் இணைந்து உருவாக்கிய கூட்டரசாங்கத்தின் சௌபாக்கியமான நாட்டை உருவாக்கும் நோக்கை "வி-2025" வெளியிட்டு வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்துக்காகவே கூட்டரசாங்கத்தை உருவாக்கி இதற்கு முன்னர் எவரும் கண்டிராத புதிய அரசியல் அனுபவத்தை நாட்டுக்கு வழங்கியதாக ஜனாதிபதி தெரிவித்தார். கூட்டரசாங்கத்தின் பயணத்துக்கு எந்தளவு விமர்சனங்கள், எதிர்ப்புகள் வந்த போதிலும், அந்த பயணம் சவால்மிக்கதாக இருந்தபோதிலும் அது நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் கட்டாயமாக நிறைவேற்றவேண்டிய பணியாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அறுபது ஆண்டுகளுக்கு கூடுதலான காலம் எதிராக இருந்த நாட்டின் முதன்மையான கட்சிகள் இரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்ட கூட்டரசாங்கத்தின் பெறுபேறு



கள் மிக குறுகிய காலத்தினுள் நூறு வீதம் வெற்றி பெறாவிட்டாலும் ஒழுக்கத்துடனும், மனமுதிர்வுடனும் செயற்பட்டு, அந்த சவால்மிக்க பொறுப்பை நிறைவேற்றுவதற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் அனைவராலும் முடிந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்திலும் கூட்டரசாங்கத்தின் பயணம் சிறந்த புரிந்துணர்வுடன் பலமாக முன்னோக்கி பயணித்து, நாட்டுக்கும், மக்களுக்குமான பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றப்படுமெனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)


### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் துன்னாலை வடக்கு புலோலி
### மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல்-2017

இவ்வாலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 09.09.2017 சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளது. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் கலை 09.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப் பணத்தினை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. ஐஸ்கிறீம் கடை
2. கச்சான் கடை
3. இனிப்புக் கடை
4. புடைவைக் கடை

அறங்காவலர் சபை :
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
துன்னாலை வடக்கு, புலோலி.
தொடர்பு: 021 226 3074, 021 205 6644
(சி/9543)



### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
•மதசார்பற்றது •ரகசியமானது • இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



### வைத்தியம்

கண்டு பிடிக்க முடியாத நோய்களினால் அவதிபடுகிறீர்களா? வைத்தியம் பல காலம் செய்து தீர்வு கிடைக்கவில்லையா? எம்மை நாடுங்கள்! பாரம்பரிய சிறப்பு மிக்க 'நாடிபரிசோதனை' (Pulse Diagnosis) மூலம் உங்களுக்கு தற்சமயம் இருக்கும், ஏற்கெனவே வந்த மற்றும் வர போகும் நோய்கள் அல்லது குறைபாடுகளை அறிந்து உலக பிரபல்யம் வாய்ந்த மருந்தில்லா சிகிச்சையான 'அக்குபஞ்சர்' சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு பெற்றிட அழையுங்கள். (289)

(Acu) Dr.Sanker 0770357307



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர் திண்ணைபுரம்
ஈழத்துச் சிதம்பரம்
பேரருட் சோதி பெருமான்
ஆரத் திருவருள் சேரக்
கலாநிதி "டாக்டர்"
எனத் தகைமை
வாரத் திருமுருக சந்நிதி
ஆச்சிரம நிறுவுனர்
மடாதிபதியுமான
மோகனதாஸ் சுவாமி
அவர்களின் சேவை
மேலும் தொடர
சந்நிதியான் செல்வ முருகனும்
அருள் புரிய
ஆண்டாண்டு ஆண்டு
தொண்டு ஆற்றியே
அருள்வாழ்வு
வாழ்கவே

Congrats

க.கு.சிவபாலன் (K.K.K). மாணிக்கவாசகர் மடாலயக் காப்பாளர்.
(சி-9547)



# NORTH LANKA IIT

SUCCESS MAKES PERFECT

இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**B.Sc in Computer Science**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: O/L or A/L

**B.Sc in Compter Science(Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

**M.Sc. in Computer Science**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: Any Degree

**Bachelor of Education (B.Ed.)**
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Bachelor of Education (B.Ed.) (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 2 Years Entry Qualification: 2 Year Diploma Training College / College of Education

**B.Sc. in Civil Engineering (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

**Master of Public Administration (MPA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Bachelor of Business Administration(BBA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Master of Education (M.Ed.)**
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

**B.Sc in Physical Education And Sports**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Bachelor of Business Management (BBM)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 3 Years Entry Qualification: A/L

**Bachelor of Business Administration (Top Up)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: HNDA

நீங்கள் எல்லாம் வல்ல சந்நிதியான்
அருள்பெற பிரார்த்திக்கின்றோம்



முழு விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna.
Ph:0767504535 / 0214927088
(சி-9544)

உ
சிவமயம், ஓம் நமசிவாய

# தீர்த்தம் எனத் தீய செயல்களைத் தீர்த்தம் ஆடும் சந்நிதி முருகவேளே!



மருதனார்க கருள்தந்து பூவரச மரத்தடிக் கீழ் உறங்கிடக் கதிரமலைக்கு மனோ வேகத்தின்ன வீழ்த்தி முருகனைக் காணவைத்த சந்நிதி வேலனே. தமிழ் ஞான முருகையனே, ஆலமிலை தனில் அன்னம் தந்தவனை வாழ்த்தியே.

"எனக்குரிய காலங்களில், வழிபாடு செய்து, தூபதீபம் வைத்து இதமாய், பூசை செய்" என உத்தரவு நந்த சந்நிதி முருகனே வேலையனே! தொண்டமான் ஆற்றிலே "தீர்த்தம்" எனத் தீய செயல்களை தீர்த்தம் என ஆடித் தீயவை தீய்க்கும் சந்நிதி முருகனே! தமிழினத் தீயநிலை தீர்த்துத் திருந்திய சாத்விக ஆற்றல் தருவாய்!

வெற்றிவேல் துதித்தாடும் தெய்வமாதர், இந்திராணி, கங்காதேவி, கார்த்திகைப் பெண்கள், கௌரியாம் அன்னையர்கள் பந்து, கழங்கு, ஊஞ்சல் ஆடும் திருக்காட்சியைக் காண வைத்த அருணகிரிநாதர். பண்டைய பகைவர்கள், அசுரர்களின் வாளைப் பிளந்து, இந்திரனுக்கு விண்ணுலக ஆட்சியை வழங்கிய வேல், சூர்ந்தகன்றாழ்ந்த பேராற்றலை புகழ்ந்த அருணகிரியார் எமது இரண்டு கரங்களும் உச்சிமேற்குவிய கண்ணில் நீர் சொரிய உள்ளத்தை ஈர்க்க வைக்கின்றார். "ஓம் முருகா!"

தமிழென்ற அமிழ்தத்தில் அறிவென்ற ஞானத்தை ஊட்டினாய் தமிழ்ச்சங்கத் தலைமை வேளே! அறிவென்ற வேல் தூக்கி ஆற்றலாம் வீரத்தால் வெற்றியைத் தந்த வேலே! இலங்கைத் தமிழ் மண்ணை தமிழ்க்குருதி பாய்ந்திட ஸ்ரீலங்கா நரகைக் காண்கின்றோம். 1983ஆம் ஆண்டு முதல் இன்றும் தொடரும், கொடூரத்தை அழித்தே தமிழுரிமை பெற்றெழச் சாத்விக ஆழ்ந்த அன்பு பெருகிடத் திருவருளுவாய்!

வேல்! வேல்! வெற்றிவேல்!
வேல்! வேல்! வீரவேல்!
வேல்! வேல்! ஞானவேல்!
ஓம் முருகையனே வேல்! வேல்! வேல்!

க.கு.க.சிவபாலன் (K.K.K)
(அகில இலங்கைத் திருமுறை மன்றம், பொருளாளர்)

# துன்னாலையில் வன்முறை; நாற்பது பேர் கைதாகினர்!

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் மேலும் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதியன்று சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த ஹன்டர் வாகனத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானதையடுத்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இது தொடர்பில் ஏற்கனவே 39 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவரும் நெல்லியடிப் பொலிஸார் குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கடந்த (03.09.2017) ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர். (இ-60)


# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். சிதம்பரப்பிள்ளை பிரபாகரன்
(முன்னாள் கிராம அலுவலர், நெல்லியடி J/376)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1962 - 04 - 25 | 2010 - 09 - 06 |





திதி:
ஆவணி அபரபக்க திரயோதசி

பண்புடனே வாழ்ந்து
பாசத்துடன் எமை அரவணைத்து
பக்குவமாய் வழிகாட்டி
பாரினிலே உயர்த்தி
பரிமளித்த எம் தலைவனே!

நீங்கா நினைவுகளுடன்...

மகாத்மா வீதி,நெல்லியடி. (சி-9535) குடும்பத்தினர்.



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1182

Search for people, places and things — Nagendram Home

**விதுசா**




**பிரதீபன்**




**துஷி**




**யது**




**நவரட்ணம்**





**சுகந்தி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.








தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.
(படங்கள் - மகாலிங்கம், மணிக்குமார்)

# இராணுவ ரீதியாக வடகொரியாவை எதிர்கொள்ள தென்கொரியா தயார்

(சியோல்)

மீண்டும் ஏவுகணை சோதனை நடத்த வடகொரியா தயாராகி வருகிறது. இதைத் தொடர்ந்து வட கொரியாவை இராணுவ ரீதியாக எதிர்கொள்ள தென் கொரியா பிரமாண்ட போர் ஒத்திகையை நேற்று முன் தினம் தொடங்கி யுள்ளது.

அணுகுண்டை விட பல மடங்கு சக்தி வாய்ந்த புதிய ஐதரசன்வெடிகுண்டை வடகொரியா அண்மையில் வெற்றிகரமாக சோதனை செய்தது. இதுதொடர்பாக தென்கொரியஜனாதிபதி மூன் ஜே-இன் கேடந்த ஞாயிற்றுக்கிழமை உயர் நிலை ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். அதில், அமைதிப் பேச்சு வார்த்தைக்கு இனி வாய்ப் பில்லை. இராணுவரீதியா கத்தான் வடகொரியாவை எதிர்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து தென்கொரியாவின் முப் படைகளும் நேற்று முந்தி னம் பிரமாண்ட போர் ஒத்திகையை தொடங் கின. இதில் நாசகார போர்க் கப்பல்கள், போர் விமானங் கள் அதிக அளவில் பங்கேற் றுள்ளன. அதிநவீன ஏவு கணைகளும் ஏவப்பட்டு வருகின்றன.



### மீண்டும் ஏவுகணை சோதனை

சர்வதேச அழுத்தங் களை மீறி மீண்டும் கண் டம் விட்டு கண்டம் பாயும் மற்றுமொரு ஏவுகணை சோதனையை நடத்த வட கொரியா தயாராகி வருகிறது என்று தென்கொரிய உள வுத்துறை தெரிவித்துள்ளது.

இதனால் கொரிய தீப கற்பத்தில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது. (3-8)



டென்மார்க்கில் கரும்புலிகள் ஞாபகார்த்தமாக Vejle நகரில் கடந்த 26ஆம் திகதி உதைபந்தாட்ட போட்டி நடைபெற்றது. நிகழ்வின் முதல் நிகழ்வாக தேசியக்கொடி ஏற்றப்பட்டது. அதன் பின்பு மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

# போர் வேண்டுமென்று பிச்சை எடுக்கின்றது வடகொரியா

## அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே விசனம்

(வோஷிங்டன்)

உலக நாடுகளின் எச்சரிக் கைகளை மீறி. ஆறாவது முறையாக அணுகுண்டுச் சோதனை நடத்தி, அதைப் பெருமையுடன் பறைசாற்றி யது வடகொரியா.

இதை எதிர்த்து ஐ.நா. சபை, பாதுகாப்பு கவுன்சி லின் அவசரக் கூட்டத்தைக் கூட்டியது.

இதில் பேசிய அமெரிக்கா, போர் வேண்டுமென்று வடகொரியா பிச்சை எடுக் கிறது என்று விமர்சித்துள் ளது.

தொடர்ந்து சர்ச்சைக் குரிய வகையில் நடந்துகொள் ளும் வட கொரியாவின் நட வடிக்கைகளுக்கு முடிவுகட்டும் நோக்கில், ஐ.நா. சபையில் பாதுகாப்புக் கவுன்சிலின் அவசரக் கூட்டம் கூட்டப்பட் டது.

இதில், ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே, வடகொரியாவின் நடவடிக்கை, அமெரிக்காவு டன் போர் வேண்டுமென்று பிச்சை எடுப்பதையே சுட்டிக் காட்டுகிறது.

இதுவரை நடந்தது எல் லாம் போதும். வடகொரியா வுடன் சுமுகமாகப் போக எங்களால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத் துப் பார்த்துவிட்டோம். அப் படி இருந்தும் அவை எது வும் சரிப்பட்டுவரவில்லை.

அமெரிக்கா, எந்த நாட்டு டனும் போரை விரும்ப வில்லை. ஆனால், யாரா வது தாக்குதல் நடத்தினால் கண்டிப்பாகத் திருப்பி அடிப் போம்.

இதுவரை ஐ.நா. சபை நிறைவேற்றிய தீர்மானங் களும் எடுத்த நடவடிக்கை களும் வேலை செய்யவே இல்லை.

எனவே, வடகொரியா வுக்கு வலிக்கும் வகையில் உடனடியாக கறாரான நட வடிக்கைகள்எடுக்கப்பட வேண் டும் என்று தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தையடுத்து. வடகொரியா மீது கடுமை யான நடவடிக்கைகளை ஐ.நா. சபை சீக்கிரமே எடுக் கும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (3-8)

# கென்ய ஜனாதிபதி மறுதேர்தல் ஒக்டோபர் 17ஆம் திகதி

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு




(நைரோபி)

கென்ய ஜனாதிபதி பதவிக் கான மறுதேர்தல் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 17 திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் தேர்தல் ஆணை யம் அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான கென் யாவில் உகுரு கென்யட்டா ஜனாதிபதியாக பதவி வகித் தார். அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் ஜனாதி பதி கென்யட்டா மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க் கட்சி சார்பில் ரெய்லா ஒடிங்கா களமிறங்கி னார். இதை யடுத்து, நடந்த வாக்கு எண் ணிக்கையில் ஜனாதிபதி கென்யட்டா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதை எதிர்க்கட்சி வேட் பாளர் ஒடிங்கா ஏற்கவில்லை. தேர்தலில் முறைகேடு நடந் ததாகத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து கென்ய தலை நகர் நைரோபி. கிசுமு. கிபேரா உள்ளிட்ட பல நகரங்களில் கலவரம் மூண்டது.

தேர்தல்முடிவுகளை எதிர்த்து ஒடிங்கா கடந்த மாதம் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் திருந்தார். தேர்தலில் ஜனா திபதி வென்றதாக வெளியான முடிவுகள் பொய் எனவும் தேர் தலில் மோசடி நடந்திருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதைத்தொடர்ந்து, ஒடிங்கா தொடர்ந்த வழக்கு மீது தீர்ப்ப ளித்த அந்நாட்டு உச்ச நீதிமன் றம் கென்யட்டா வெற்றி பெற்றது செல்லாது. 60 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டுமௌ தேர்தல்ஆணை யகத்திற்கு உத்தரவிட்டது.(3-8)

# 28,000 குடும்பங்கள் பதுளையில் பாதிப்பு



உமா ஓயா திட்டத்தின் பாதிப்பு காரணமாக பதுளை மாவட்டத்தில் 28 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 28 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக இதுவரை கணிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர் நிமால் அபேசிறி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

பாதிப்புக்கு உள்ளான குடும்பங்களுக்கு அவசியமான நிவாரணங்களை வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக இதுவரை 300 மில்லியன் ரூபா நிதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாதிப்புக்குள்ளான வீடுகள் மற்றும் அவதானம் நிறைந்த பிரதேசங்களில் உள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு திக்கராவ மற்றும் கிரேக்வத்த பகுதிகளில்காணிகள் கையகப்படுத்தப்பட்டன.

இருந்தபோதும் அந்த பிரதேசங்களும் உமா ஓயா திட்டம் காரணமாக எதிர்காலத்தில் பாதிப்புக்குள்ளாகலாம் என தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இதன்படி, அந்த நடவடிக்கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக நிமால் அபேசிறி தெரிவித்தார்.

இதுவரை பாதிப்புக்கு உள்ளான 1861 வீடுகளுக்காக அரசாங்கம் 26 கோடிக்கும் அதிகமான நிதி பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# போதைப்பொருள் பாவிப்பவர்களே சிங்களவர்கள்

## முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வருபவர்களும் விநியோகிப்பவர்களும் சிங்கள பௌத்தர்கள் அல்லவெனவும், அதனைப் பாவிப்பவர்களே சிங்களவர்கள் எனவும் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கவலை வெளியிட்டார்.

பலாங்கொடயில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

உலகத்துக்கு போதைப் பொருள் விநியோகம் மேற்கொள்ளும் கேந்திர மையம் இலங்கை என சர்வதேச அறிக்கையொன்று வெளியாகியுள்ளது. இந்த நாட்டிலுள்ள அரசியல் வாதிகளுக்கு இந்த அபாயத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியாது. இதனைப் பார்த்துக் கொண்டு இருக்கவும் முடியாது.

ஐந்து வருட ஆட்சிக்கு வந்தவர்கள் எவ்வாறு 99 வருடங்களுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்வது?. எமது எதிர்கால சந்ததியினரை அடமானம் வைக்க அவர்களுக்கு இடமளிக்க முடியாது. நாம் ஜனநாயகத்தைப் பெறவில்லை.

அதன் பெயரில் அதற்குப் பதிலாக வேறு ஒன்றையே பெற்றுள்ளோம் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (இ-7)

# ஒரு வாரத்திற்குள் அரசியல் மாற்றம் நாமல் ஆரூடம்

ஒரு வாரத்திற்குள் அரசியல் மாற்றம் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் ஆளும் கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் தற் பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் தேர்தல்களில் கூட்டு எதிர்க்கட்சி விரிவான ஓர் கூட்டமைப்பினை உருவாக்கி போட்டியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த கூட்டமைப்பில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் தலைமை, கட்சியை ஐக்கிய தேசியக் கட்சிக்கு காட்டிக் கொடுத்த காரணத்தினால் கட்சியின் 66 ஆம் சம்மேளனத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு!

(கொழும்பு)

மொரட்டுவ வீரபுரன் அப்புராஜ மாவத்தையில் வீடொன்றின் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட் டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் வீட்டின் நுழைவாயிலை நோக்கி துப்பாக்கிச்சூடு மேற் கொண்டுள்ளனர். இதனால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இச்சம்பவம் குறித்து மொரட்டுவ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

# மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

கோப்பாய் பிரதேச தேசோதய சபை, கைதடி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் வறுமைக் கோட்டின் கீழுள்ள 100 பேருக்கு இலவச கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் தே. நமணிதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

எனவே மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ள விரும்புவோர் நாளை மறுதினம் 8 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர்களை காந்திஜி சனசமூக நிலையத்தில் பதிவு செய்யுமாறு சனசமூக நிலையத் தலைவர் தே. நமணிதாசன் அறிவித்துள்ளார். (இ-7-10-134)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1984 இந்து<br>நட்சத்திரம் : சதயம்<br>கி.பா:26செவ் 4 ல்<br>உயரம் : 5'9"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/7052 | பிறப்பு : 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் செவ் 1ல்<br>உயரம் : 153cm<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7084 |
| பிறப்பு : 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 12ல்<br>உயரம் : 5'10"<br>தகைமை/தொழில்:MBS/ சித்தவைத்தியர்<br>தொ.இ: B/7053 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சதயம் செவ் 7ல்<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7085 |
| பிறப்பு : 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா : 33சூரி செவ் 11 ல்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:A/L/. அரசதொழில்<br>தொ.இ: B/7055 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 52சூரிசெவ் 5 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/7087 |
| பிறப்பு : 1982 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 1ல்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:HNDA/ அரசதொழில்<br>தொ.இ: B/7057 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 30செவ் 2 ல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ அரசதொழில்<br>தொ.இ: G/7088 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# பொலநறுவையில் கடும் காற்று



பொலநறுவை, கதுருவெல நகர் உட்பட அப்பிரதேசத்தைச் சூழவுள்ள பல பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை கடுமையான காற்று வீசிய தனால் அங்கிருந்த பல வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது..

இதனால், அப்பிரதேசத்தின் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

(கொழும்பு)

காலி, களுத்துறை, இரத்தின புரி, கோகாலை மாவட்டங்களுக்காக விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக இடர் காப்பு முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இடர் நிலமை தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்குமாறு நிலையத் தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த மக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 140 | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 110 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 300 | 260 | 320 | 300 |
| தக்காளி | 120 | 130 | 160 | 240 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 80 | 70 |
| கோவா | 100 | 50 | 100 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 160 | 140 | 160 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 60 | 60 |
| புடோல் | 80 | 50 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 180 | 200 | 280 | 150 |
| பெரிய வெங்காயம் | 130 | 110 | 130 | 140 | 160 | 130 |
| பாகற்காய் | 180 | 130 | 220 | 120 | 280 | 180 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 50 | 50 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 70 | 120 | 200 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 70 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 120 | 60 | 60 |
| கறி மிளகாய் | 80 | 90 | 160 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 50 | 80 | 60 | 60 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 200 | 140 | 200 | 140 |
| கத்தரிப்பிஞ்சு | 100 | 120 | 100 | 100 | 120 | 120 |
| கீரை - பிடி | 40 | 20 | 40 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 200 | 150 | 320 | 200 | 300 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 300 | 240 | 500 | 260 | 600 | - |
| வெங்காயப்பூ | 250 | 70 | 200 | - | 200 | 250 |
| முள்ளங்கி | 80 | 30 | 80 | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 30 | 60 | 50 | 50 | 80 |

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 02.09.2017-04.10.2018



பொதுச்சேவை செய்வதன் மூலம் மதிப்பை, மரியாதையை வளர்த்துக்கொள்ளும் கடக இராசி அன்பர்களே!

உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான தனுசு இராசிக்கும், 9ஆம் இடமான மீன இராசிக்கும் உரியவர் குரு பகவான். இதுவரை உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் இருந்த குரு, இந்தக் குருப்பெயர்ச்சியால், அர்த்தாஷ்டம குருவாக 4ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். அர்த்தாஷ்டம குரு என்பது அஷ்டமத்தில் பாதி பங்கு வலிமை உள்ளது. அஷ்டமத்து குரு நடைபெறும் காலத்தில் கொடுக்கும் துயரங்களில் பாதியளவேனும் அர்த்தாஷ்டம குருவின் காலத்தில் கொடுப்பார் என்பது நியதி. ஆனால் உங்களுடைய சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம்பெற்றிருந்தால், நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. நல்ல காரியங்கள் நிறைய நடைபெறும். ஆனால் வலிமை இழந்த திசாபுத்திகளின் ஆதிக்கம் நடைபெறுமேயானால் வழக்குகளையும், இழப்புகளையும் தரலாம்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை 6இற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், உடல் நலம் உடனுக்குடன் சீராகும் என்றாலும் மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க முடியாது. உங்கள் ஜாதகத்தில் திசாபுத்தி வலுவடைந்திருந்தால், உங்கள் குடும்பத்தினர்களுக்கு ஆரோக்கியத் தொல்லையும், அதனால் விரயங்களும் உருவாகும். வரும் துயரங்கள் வாசலோடு நிற்க வேண்டுமானால் பரிகாரங்களையும், வழிபாடுகளையும் முறையாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குருவை வழிபாடு செய்யலாம்.

பின்னோக்கி நகரும் கிரகமான இராகு பகவான் உங்கள் இராசியிலும், சப்தம ஸ்தானத்தில் கேது பகவானும் சஞ்சரிக்கிறார்கள். புத்திர ஸ்தானத்தில் சனிபகவான் வீற்றிருந்து ஆட்சி செய்கிறார். இதனைக் கருத்தில் கொண்டு நாம் குருப்பெயர்ச்சியின் பலனை அறிந்து கொள்ள வேண்டும். ஜென்ம இராசியைத் தேடி வந்திருக்கும் இராகுவிற்கும், குடும்பத்தில் நிம்மதிக் குறைவை உருவாக்கும் விதத்தில் களஸ்திர ஸ்தானத்தில் வீற்றிருக்கும் கேதுவிற்கும், முறையாக நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது. அதன்பிறகு திசை மாறிய தென்முகக் கடவுள் இருக்கும் ஆலயங்களுக்கும் சென்று அபிஷேக ஆராதனைகளைச் செய்து வழிபட்டு வருவது நல்லது.

உங்களுக்கு இந்த நான்காமிடத்து குரு, எப்படிப்பட்ட பலன்களை வழங்குவார் என்பதைப் பற்றி பார்ப்போம்.

### அர்த்தாஷ்டம குருவின் சஞ்சாரம்!

தாய் ஸ்தானம், கல்வி ஸ்தானம், சுகஸ்தானம் எனப்படும் இடத்திற்கு இப்பொழுது குரு வருகிறார். அவர் வந்திருக்குமிடம் பகை கிரகமான சுக்ர வீடாகும். எதிரிகள் இல்லத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் பொழுது, இயன்றளவிற்கு நன்மை செய்யுமே தவிர, எதிர்பார்த்த அளவிற்கு நன்மை செய்யுமா? என்பது சந்தேகம்தான். தாயின் உடல்நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

இதுபோன்ற காலத்தில் இடம், பூமி வாங்க முடியவில்லையே என்ற ஏக்கம் ஒரு சாரருக்கு இருக்கும். பத்திரப்பதிவில் தடை ஏற்படுகின்றதே என்று கவலைப்படுவீர்கள். மற்றொரு பிரிவினர் கட்டியவீடு பாதியில் நிற்கிறதே என்று கவலைப்படுவர். வாங்கிய வாகனங்களால் செலவு ஏற்படும். எனவே எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

தற்சமயம் உங்கள் இராசிக்கு 5இல் சஞ்சரிக்கும் சனி பகவான் 3 மாதங்கள் கழித்து, உங்கள் இராசிக்கு 6ஆம் இடமான தனுசு இராசிக்குச் செல்லப் போகிறார். அந்த நிகழ்வு 19.12.2017இல் நடைபெறவிருக்கிறது. கடக இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் 6இல் சஞ்சரிக்கும் பொழுது சாதகமான பலன்கள் உங்களுக்கு வந்து சேரும்.

## அர்த்தாஷ்டம குரு வருகிறது! ஆலயம் சென்றால் வளம் கூடும்!

எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஜனவரிக்கு மேல் ஏற்படப் போகிறது. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள், இப்பொழுது எளிமையாக முடியும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை தானாக வந்து சேரும். செய்யும் சுயதொழில் எதுவாக இருந்தாலும் அது சீராக வளர்ச்சி பெறும். வர்த்தகம் சம்பந்தமாக வாங்கிய கடன்களை அடைத்து நிம்மதியடைவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குருப்பெயர்ச்சி காலத்தின் முற்பாதியை விட பிற்பாதி சிறப்பாக இருக்கும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவும், இனிய பலன்கள் ஏராளமாக வந்து சேரவும் குரு வழிபாடு கைகொடுக்கும்.

### குரு பார்வை பலன்!

குரு பகவான் பொதுவாக இருக்கும் ஸ்தான பலத்தைவிட பார்வை பலத்தையே அதிகம் கொண்டவர் என்பது ஜோதிட சாஸ்திர விதி. அந்த அடிப்படையில் 8,10,12 ஆகிய மூன்று இடங்களையும் குரு பகவான் பார்க்கிறார்.

எட்டினை குருதான் பார்த்தால்
இழந்தவை வந்து சேரும்!
பத்தினை குருதான் பார்த்தால்
பணம்தரும் தொழிலும் வாய்க்கும்!
பன்னிரண்டை குருதான் பார்த்தால்
பயணத்தால் பலன் கிடைக்கும்!
பார்த்திடும் குருவைத் தொழுதால்
பலவித நன்மை சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் குருவின் பார்வை 8இல் பதிவதால், குழப்பங்கள் அகலும். எனவே சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை இப்பொழுது ஈடுசெய்யப் போகிறீர்கள். எதிரிகளின் தொல்லை இனி குறையும். உதிரி வருமானங்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்க முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். உத்தியோகத்தில் இழந்த பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். உங்களுக்கு ஒத்துவராத மேலதிகாரிகள் இப்பொழுது மாற்றப்படலாம். ஆரோக்கியத் தொல்லை அகல மாற்றுமருத்துவம் கைகொடுக்கும்.

தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவது யோகம் தான். சுக ஸ்தானத்தில் இருந்து பார்க்கும் குருவின் பார்வை மேலும் சிறப்பானது. வங்கிச்சேமிப்பு அதிகரிக்கும் விதத்தில் இலாபம் இருக்கும். தங்கு, தடைகள் மற்றும் குறுக்கீடுகள் அகலும். புதிய நண்பர்களை சேர்த்துக்கொண்டு தொழில் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு அரசாங்க அனுகூலமும் கிடைக்கும். தொழில் போட்டி விலகும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். சகோதர வர்க்கத்தினரின் சச்சரவுகளை முக்கியபுள்ளி ஒருவர் சமாதானப்படுத்துவார். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீரென வெளிநாட்டு அழைப்பு வந்து வியக்க வைக்கலாம். வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு அங்கேயே தங்குவதற்கு அரசாங்க சலுகை கிடைக்கலாம்.

பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். குடும்பத்தில் இருந்த பிரச்சினை சுமுகமாக முடியும். புதிய முதலீடுகள் செய்பவர்கள், அனுபவமிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. விரய ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், வீட்டை சீரமைப்பது, பழுதான பகுதிகளை சரி செய்வது, பெண் பிள்ளைகள் இருந்தால், திருமண சீர்வரிசை பொருட்கள் வாங்கி வைப்




பது என்று சுப விரயங்களை மேற்கொள்ளலாம்.

### குருவின் அதிசாரம்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை, குரு அதிசாரமாக விருச்சிக இராசிக்குச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு 9ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். இது ஒரு பொற்காலமாக அமையும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் முயற்சியில் இலாபம் கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திருமணத் தடை அகலும். அருமையான சந்தர்ப்பங்களெல்லாம் உங்களைத் தேடி வரப்போகிறது. அதிகாரத்துவ யோகம் பெற்றவர்கள் உங்களுக்கு நட்பாகி, எதிர்கால நலனுக்கு வழிகாட்டப் போகிறார்கள். வெளிநாடு செல்வதில் இருந்த தடை அகலும்.

### அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!

7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அலை பாயும் மனதை அடக்கியாள வேண்டிய நேரமிது. விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் போது கவனம் தேவை. வீடு மாற்றம், உத்தியோக மாற்றங்கள் விருப்பமில்லாமலேயே வந்து சேரும். தேடிச் சேர்த்த தொகை திடீர் விரயமாகும்.

தெய்வீகப் பயணங்களை மேற்கொள்ள உகந்த நேரமிது. உத்தியோகத்தில் உங்களது துறை சார்ந்த கோப்புகளை சரிபார்த்து கையெழுத்திடுங்கள். இல்லையேல் வீண்பழிகளுக்கு ஆளாவீர்கள். அரசுப் பணியில் இருப்பவர்கள் மேலிடத்து நிர்ப்பந்தங்களால் பாதிக்கப்படுவர். முன்பின் அறியாதவர்களை தொழில் கூட்டாக சேர்த்துக் கொள்ளக்கூடாது. பங்காளி வர்க்கத்தினரின் பகை உருவாகலாம். எதிரிகளின் தொல்லை குறையவும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கவும், வீட்டில் கணபதி ஹோமம் போன்ற சிறப்புப் பரிகாரங்களை செய்யலாம்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு, குருப்பெயர்ச்சியாகி மூன்று மாதங்களுக்குப் பிறகே மிகச்சிறந்த பலன்களை எதிர்பார்க்க முடியும். அர்த்தாஷ்டம குருவாக வருவதால் மனக்குழப்பம் அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை கூடும். பண நெருக்கடி வரலாம்.

இருப்பினும் தைரியமும், தன்னம்பிக்கையும் மிக்க நீங்கள் அதைச் சமாளித்து விடுவீர்கள். சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு குடும்ப ஒற்றுமை பலப்படும். 12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. வீடு கட்டும் யோகமும், ஒருசிலருக்கு உண்டு. வேலைவாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள அரும்பாடுபடுவீர்கள். வீண் விரயங்களில் இருந்து விடுபட வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குங்கள். குருவின் அதிசார காலத்தில் காசி, இராமேஸ்வரம் போன்ற புனித யாத்திரைகளை மேற்கொள்வீர்கள். செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாடும், நாகநாதர் சந்நிதியில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களையும் முறையாகச் செய்வது நல்லது.

### செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!

உங்கள் இராசிநாதன் சந்திரன் என்பதால் பௌர்ணமியன்று மலைவலம் வருவது நல்லது. மேலும் செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாடு செய்யுங்கள். போராட்டமான வாழ்க்கை மாற சிவகங்கை மாவட்டம் இரணியூரிலுள்ள ஆட்கொண்ட நாதர்-சிவபுரம் தேவியை மலர் மாலை அணிவித்து வழிபட்டால் வாழ்க்கை வளமாக அமையும்.

(தொடரும்)

# அனிதாவின் மறைவிற்கு நீதிகோரி தொடர்கிறது போராட்டம்



(சென்னை)

'நீட்' தேர்வினால் மருத்துவம் படிக்கும் வாய்ப்பை இழந்த மாணவி அனிதா தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தை கண்டித்து சென்னையில் நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரி மாணவ-மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து விட்டு இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கல்லூரி முன்பு அமர்ந்து மாணவி அனிதாவின் மரணத்திற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கோஷமிட்டனர். மத்திய, மாநில அரசுகளை கண்டித்து ஆவேசமாக பேசினார்கள்.

நீட் தேர்வை முற்றிலும் நீக்க வேண்டும் என்று மாணவர்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு நடிகர்-நடிகைகளும் ஆதரவு அளித்தனர்.

இதேபோல மாநில கல்லூரி, சென்னை பல்கலைக்கழக மாணவ-மாணவிகளும் வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் புதுவையில் உள்ள ஆளுநர் மாளிகையை முற்றுகையிட்டு தமிழக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். (3-8)

## விவசாயிகள் நூதன போராட்டம்



(டில்லி)

டில்லியில் தமிழக விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் சோற்றுக்கு வழியின்றி எலியை உண்ணும் நிலைக்கு வந்து விட்டனர் என்பதை வெளிப்படுத்தும் முகமாக நேற்று முன்தினம் நேற்று முன்தினம் நூதன போராட்டம் நடத்தினர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் தமிழக விவசாயிகள் நடத்தும் போராட்டம் நேற்று முன்தினம் 51 ஆவது நாளாக நீடித்தது.

இதையொட்டி நேற்று முன்தினம் எலிகளை உயிருடன் பிடித்து வாயில் கவ்வியபடி விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். (3-8)

பாரதச் செய்தி

## நீரில் மூழ்கப்போகும் சென்னை?



(சென்னை)

தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறையின் கீழ் பருவநிலை மாற்றம் தமிழக செயற்றிட்டம் என்ற அமைப்பு செயற்பட்டு வருகிறது.

இந்த அமைப்பு பருவநிலை மாற்றும் உலக வெப்பமயமாதல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்வு நடத்தியது.

இந்த ஆய்வில் பல அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது. உலக வெப்பமயமாதலால் தமிழ்நாட்டில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வெப்பமயம் காரணமாக அண்டார்டிகாவில் உள்ள பனிப்பாறைகள் அதிக அளவில் உருகி வருகின்றன. இதன் காரணமாக 2050இல் கடல் நீர்மட்டம் 4.8 மீற்றர் அளவிற்கு உயரும்.

அதேபோல் கிழக்கு அண்டார்டிகாவில் உள்ள பனிப்பாறைகள் உருகிவருவதால், கடல் நீர்மட்டம் 3.4 மீட்டர் உயரம் என்றும் கண்டுபிடித்துள்ளனர்.

இதனால் தமிழ்நாட்டில் 2050 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு கடலோர பகுதி யில் 4.35 மீற்றரில் இருந்து 6.85 மீற்றர் வரை நீர்மட்டம் உயரும் என்று தெரிய வந்துள்ளது.

சுமார் 1963 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு கடலில் முழ்கிவிடும். இதனால், சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 144 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு கடற்பகுதிக்குள் சென்றுவிடும்.

10 இலட்சம் மக்கள் வாழ்விடத்தை இழந்து வெளியேற வேண்டிய கட்டாய நிலை ஏற்படும். அதோடு காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தில் 5 இலட்சம் பேர் வெளியேறும் நிலை உருவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

# எடப்பாடி முதல்வராக தொடர ஆதரவு தெரிவித்து தீர்மானம்



(சென்னை)

அ.தி.மு.க. எம்.எல். ஏக்கள் கூட்டத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கூட்டினார். நேற்று கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் 109 எம்.எல்.ஏக்கள் பங்கேற்றதாக தகவல் வெளியாகியுள்ளது. அனைவரும் எடப்பாடி தலைமையை ஏற்பதாகவும், சட்டமன்ற கூட்டத்தலைவராக எடப்பாடி நீடிக்க ஆதரவு அளிப்பதாகவும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏற்கனவே கடந்த வாரம் எம்.எல்.ஏ. எம்பிக்கள் கூட்டத்தை கூட்டிய எடப்பாடி அந்த கூட்டத்தில் 4 முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினார்.

12 ஆம் திகதி பொதுக்குழுக் கூட்டத்தை கூட்ட முடிவெடுத்திருந்த நிலையில் நேற்று எம்.எல்.ஏக்கள், மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை கூட்டியுள்ளனர்.

இதில் கலந்துகொண்ட அனைவரும் முதல்வர் எடப்பாடி மீது முழு நம்பிக்கை வைத்துள்ளதாகவும், அவர் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவதாகவும் தீர்மானம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இக்கூட்டத்தில் அ.தி. மு.க அணியின் சார்பாக 109 எம்.எல்.ஏக்கள் கலந்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இக் கூட்டத் தில் தினகரன் ஆதரவு எம். எல்.ஏ என்று கூறப்படும் ஸ்ரீவில்லிபுத்தூர் எம்.எல்.ஏ சந்திரபிரபா கலந்து கொண்டார். (3-8)

## நன்னிலம் ஒன்றிய

# அ.தி.மு.க. அலுவலகம் யாருக்கு சொந்தம்? எடப்பாடி - தினகரன் அணியினர் மோதல்





(திருவாரூர்)

நன்னிலம் ஒன்றிய அ.தி.மு.க. அலுவலகம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பாக அ.தி.மு.கவினரிடையே மோதல் ஏற்பட்டது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர். காமராஜ் தமிழக உணவுத்துறை அமைச்சராக உள்ளார்.

நன்னிலம் தெற்கு ஒன்றிய அ.தி.மு.க செயலாளராக ராம. குணசேகரன், வடக்கு ஒன்றிய செயலாளராக அன்பு ஆகியோர் இருந்து வந்தனர்.

இவர்கள் இருவரும் எடப்பாடி - பழனிச்சாமி அணியை சேர்ந்தவர்கள்.

இந்நிலையில் இவர்களை நீக்கி விட்டு தெற்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளராக உதயகுமார், வடக்கு ஒன்றிய செயலாளராக பாண்டியன் ஆகியோரை டி.டி.வி. தினகரன் அறிவித்தார்.

இதனை எடப்பாடி பழனிச்சாமி அணியினர் ஏற்க மறுத்தனர்.

இந்நிலையில் நன்னிலம் ஒன்றிய அ.தி.மு.க. அலுவலகம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி அணியினருக்கும், டி.டி.வி. தினகரன் அணியினருக்கும் தகராறு ஏற்பட்டது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை நன்னிலம் தாசில்தார் தலைமையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இரவு 10.30 மணி வரை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் ஏற்படவில்லை.

இதனால் ஆர்.டி.ஓ. தலைமையில் பேச்சுவார்த்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

பதற்றம் நிலவுவதால் கட்சி அலுவலகம் முன் பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர். (3-8)

# அனிதாவின் மரணத்திற்கு மத்திய அரசே காரணம்

## வைகோ சீற்றம்

(பொன்னமராவதி)

அரியலூர் மாணவி அனிதா மரணத்திற்கு மத்திய அரசே காரணம் என்றும் ஜெயலலிதா இருந்திருந்தால் இது போன்று நடந்திருக்காது என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே பூலாங்குறிச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்க வந்திருந்த அவர் நிருபர்களிடம் தெரிவித்ததாவது,

நாட்டில் எந்த ஒரு மாநிலத்திற்கும் இது போன்ற அநீதியை மத்திய அரசு செய்ததில்லை. அனிதாவின் துயர மரணத்திற்கு மத்திய அரசே காரணம். மாநில அரசு தவறு செய்தால் முதலில் கண்டிப்பது நான்தான். நீட் விவகாரத்தில் தமிழக அரசு இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது. ஜெயலலிதா உயிருடன் இருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது.

மாணவர்கள் தங்கள் சொந்த கிராமத்திற்கு சென்று கோவில், குடிநீர், நூலக வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மதிப்பெண் குறைந்தாலும், தேர்வில் தோல்வியுற்றாலும் கவலைப்படாமல் இருக்க பெற்றோர்கள் அறிவுறுத்த வேண்டும். ஒரு கதவு மூடினால் மறு கதவு திறக்கும் என்று அறிவுறுத்த வேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (3-8)

உங்கள் சிந்தனையை மறைக்க வேண்டாம். நேர்மை யான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள்.

– ஹோமர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜனாதிபதி மைத்திரி தன்னை அதிரடியாக மாற்றியது ஏன்?

போர்க்குற்றம் புரிந்த படையினர் மீது எவரும் கைவைக்க முடியாது என இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தவிர்ந்த வேறு எவர் இதைக் கூறியிருந்தாலும் தமிழ் மக்கள் அது குறித்து அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

ஆனால் இதைக் கூறியவர் ஜனாதிபதி மைத்திரி. இந்த நாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து கொண்ட ஒரு நல் மனிதர் ஜனாதிபதி மைத்திரி என்ற நம்பிக்கை இன்றுவரை தமிழ் மக்களிடம் உள்ளது.

தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைப் புரிந்து கொண்டவர் அவர். வலி. வடக்கில் நலன்புரி முகாம்களில் இருக்கின்ற மக்களின் வாழ்விடங்களுக்கு விஜயம் செய்து அவர்களின் அடுக்களைக்குள் நுழைந்து அவர்கள் என்ன சாப்பிடுகிறார்கள் என்பது வரை பார்த்தவர் அவர். அவரின் அச்செயல் தமிழ் மக்களை நெகிழ வைத்தது.

இவ்வாறு பார்வையிட்ட பின்னர் தென் பகுதியில் இனவாதம் பேசுபவர்கள் ஒருக்கால் வட மாகாணத்துக்கு வந்து இடம்பெயர்ந்த மக்கள் படும் துன்ப துயரங்களை நேரில் பார்க்க வேண்டும். அவ்வாறு பார்த்தால் அவர்கள் இனவாதம் பேசமாட்டார்கள் என்று கூறியவர்.

தவிர, மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்தவுடன் யாழ்ப்பாணத்துக்கு விரைந்தோடி வந்து வித்தியாவின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறியவர். கல்லூரி மாணவிகளைச் சந்தித்து பயம் கொள்ளாதீர்கள் என்று அச்சம் களைந்தவர்.

இவ்வாறாக எப்போதும் தமிழ் மக்களின் விருப்புக்குரியவராக இருந்த ஜனாதிபதி மைத்திரியிடம் மனிதாபிமானம், நேர்மை, நியாயம் என்பன தாராளமாக இருந்தன. இதுவே அவர் மீது தமிழ் மக்கள் மதிப்புக் கொள்ளக் காரணமாயிற்று.

எச்சந்தர்ப்பத்திலும் வடக்கின் முதலமைச்சருக்கு மதிப்பளிப்பதில் அவர் இம்மியும் தவறியதில்லை. ஒரு நேர்மையான அரசியல் தலைவர் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்ற உயர்ந்த நினைப்பு ஜனாதிபதி மைத்திரியிடம் இன்றுவரை உள்ளது. இதுவும் ஜனாதிபதி மீது தமிழ் மக்கள் நன்மதிப்புக் கொள்ளக் காரணமாயிற்று.

தமிழ் மக்களின் விடயங்களில் ஜனாதிபதி மைத்திரி இன்னமும் எதையும் செய்யவில்லை என்ற கருத்தியல் இருக்கின்ற போதிலும் அவர் மீது தமிழ் மக்கள் கோபமோ ஆத்திரமோ கொண்டதில்லை என்பது அதிசயமான உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், போர்க்குற்றம் தொடர்பில் படையினரைக் காப்பாற்றுவது பற்றிய அவரின் கருத்து தமிழ் மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது.

நியாயம் உணர்ந்தவர் என்று தமிழ் மக்கள் கருதியிருந்த ஜனாதிபதி மைத்திரி சடுதியாக தன்னை மாற்றிக் கொண்டதற்குள் எங்கள் அரசியல் தலைமை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களை பற்றிப்பிடிப்பதும் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆத்திரத்தைக் கொடுத்ததன் விளைவுதான் இது என்று நினைப்பதிலும் தவறில்லை.

# மதிப்பீட்டுப் பணிகளால் வகுப்புக்கள் இடம்பெறாது

## அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளதால் இன்று 6 ஆம் திகதி புதன்கிழமை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை வரை தரம்7, தரம் 8 மற்றும் உயர்தர வகுப்புக்கள் இடம்பெறாது எனவும் ஆரம்பப்பிரிவு தரம் 6,9,10,11 ஆகிய வகுப்புக்கள்வழமை போன்று இடம்பெறும் எனவும் பாடசாலை அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# பெண் வேடமிட்ட ஆண் படுகொலை

பெண் வேடமிட்டு சென்ற ஆணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை நகரத்தில் அமைந்துள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் இருந்து கொலை செய்யப்பட்ட இளைஞனின் சடலம் ஒன்று நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனைத் தாக்கி கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தம்புள்ளை களுன்தேவ வல்கமவெவ பிரதேசத்தைச் சேர்ந்த சனத்குமார என்ற இளைஞரே இவ்வாறுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் இரவு நேரங்களில் பெண் ஆடையில் அந்தப் பகுதியில் சுற்றித் திரிவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த இளைஞன் பெண்களின் ஆடை அணிந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.


நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்த நபர் விழுந்து கிடந்ததனை அவதானித்தவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பலகைத் துண்டு ஒன்றையும் குடை, கைக்கடிகாரம் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் நீண்டகாலமாக பெண் ஆடை அணிந்து இரவில் சுற்றித் திரிவதாகவும் பெண்ணைப் போன்றே நடந்து கொள்வதாகவும்பொலிஸ விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர படுத்தப்பட்ட பல சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

கொலைச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)




# திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அவர் முகத்தில் வியப்பு, திகைப்பு, பிரமிப்பு என அடுத்தடுத்து உணர்ச்சிகள் பல அலைமோதின.

அலர்மேல் மங்கையை அந்தப்புரத்துக்கு அனுப்பி வைத்தார். புன்னகை பொலிய ஆகாசராஜனை நோக்கினார்.

மன்னா! முற்பிறப்புக்களில் நீ சேர்த்த புண்ணியங்களால்தான் அலர்மேல் மங்கையைப் புதல்வியாக அடைந்திருக்கிறாய். திருமகளின் அம்சங்கள் அனைத்தும் அவளிடத்தில் நிரம்பியிருக்கின்றன. இனி இவளுக்கு மாப்பிள்ளை தேடி அலைய வேண்டிய அவசியம் உனக்கில்லை. அந்த நாராயணனே தேடிவந்து உன் மகளை மணந்து உனக்கு மாப்பிள்ளையாகப் போகிறான். எனவே நீ உன் கவலையை விடு... என்று கூறி விடைபெற்றுச் சென்றார். ஆகாச மன்னனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லைதான் கேட்டதெல்லாம் உண்மைதானா? (தொடரும்)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பயனுள்ளதைச் செய்



✦ பிறருடைய குறைகளைச் சிந்தித்து பொழுதை வீணாக்காதே. எப்போதும் பயனுள்ள பணியில் ஈடுபடு.

✦ எங்கு தேடினாலும் கடவுளைக் காண முடியாது. அவர் உன் உள்ளத்திலேயே குடி கொண்டிருக்கிறார்.

✦ பெருமை பேசாதே. உன்னிலும் செல்வம் படைத்தவர் பலர் உலகில் இருக்கவே செய்கிறார்கள்.

✦ உலக வாழ்வில் இருந்து கொண்டே மனதை அடக்கி ஆள்பவனே சிறந்த வீரன்.

✦ கடின முயற்சி உள்ளவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

# அஜித் நிவாட் கப்ராலின் வங்கிக் கணக்குகளை சோதனையிட அனுமதி

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் வங்கிக் கணக்குகளை சோதனையிடுவதற்கு கோட்டே நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கோட்டே நீதவான் லங்கா ஜயரட்ன இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளின் வங்கிக் கணக்கு விபரங்களை சோதனையிட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பல்வேறு வங்கிகளில் அவர்களுக்கு காணப்படும் 12 கணக்குகள் குறித்து சோதனையிடப்படவுள்ளது.

அம்பாந்தோட்டையில் பொதுநலவாய நாடுகள் போட்டியை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வதற்காக 650 மில்லியன் ரூபா செலவிடப்பட்டமை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுநலவாய நாடுகள் போட்டித் தொடர் ஆரம்பமாக முன்னதாகவே இந்த அம்பாந்தோட்டையில், பொதுநலவாய நாடுகள் கிராமமொன்றை அமைப்பதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மதத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கடந்த 2015 ஆம் ஆண்டில் செய்த முறைபாடு ஒன்றுக்கு அமைய இந்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (இ-7)

# பாடசாலைக்கு விசேட விடுமுறை

யாழ். நீர்வேலி சி.சி.த.க. பாடசாலைக்கு அருகிலுள்ள அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை நீர்வேலி சி.சி. த.க. பாடசாலைக்கு விசேட விடுமுறை தினமாக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான பதில் பாடசாலை எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் எனவும் பாடசாலை அதிபர் கி.ரவீந்திரநாதன் அறிவித்துள்ளார். (இ-10-136)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தமிழ் திருமண முறைகள் தெரியுமா?**

இந்தக் காலத்தில் நடைபெறும் திருமணங்கள் தமிழ் முறைப்படியும் அல்லாமல் வைதீக முறைப்படியும் அல்லாமல் இரண்டும் கலந்து நடைபெறுகின்றது. திருமணத்தின் போது நடத்தப்படும் சடங்குகள் எதையும் அறிந்து செய்வதில்லை. எந்திரம் போல் முன்னுக்குப்பின் முரண்பாடாக செய்து வருகின்றனர். திருமண சடங்குகள் முறைப்படுத்தப்படாமல் செய்வதனால் பல திருமணங்கள் பாதியிலேயே நின்று போவதும் உண்டு. திருமணத்திற்குப் பின் பல பிரச்சினைகளைச் சந்திப்பதும் உண்டு. தமிழ் முறைப்படி திருமணங்கள் கொங்கு வேளாளர் சமூகத்தினரிடத்தில் மட்டும் இன்றும் செய்யப்பட்டு வருகின்றது. நாகரிக வளர்ச்சியின் காரணமாக இந்தச் சமூகத்தினரிலும் ஒரு சில திருமண முறைகளை மாற்றி வருகின்றனர். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மணடைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில அக்கராயன் குளம், கோவில்குடியிருப்பு, அமைதிபுரம், முறிகண்டி கொமாண்டோ இராணுவ முகாம், அம்பலப்பெருமாள், கோட்டைகட்டி, ஆனை விழுந்தான், வன்னேரிக்குளம், சோலை, ஜெயபுரம், நாகபடுவான், பல்லவராயன் கட்டு, வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில், முழங்காவில, நாச்சக்குடா, வெள்ளாங்குளம ஒருபகுதி ஆகிய இடங்களிலும வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், வவுனியா நகரம் (மன்னார் வீதி) நெளுக்குளம் ஊடாக செட்டிகுளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பறயனாலங்குளம், பூவரசங்குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக் கட்டிப்புலவு, பிரமனாலங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை, ஒமேகாலைன், UNHCR குருமன்காடு, வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம் வைத்திய சாலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் மனனார் பிரதேசத்தில் பெரிய பண்டிவிரிச்சானிலிருந்து மடு வரை, ஈச்சல வாக்கையிலிருந்து பள்ளமடு வரை, விடத்தற்தீவிலிருந்து வெள்ளாங்குளம் வரை, வெள்ளாங்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம், விடத்தற்தீவு வைத்தியசாலை, கணேசபுரம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் - 2017
## ஹாட்லியைற்ஸ் அணியின் முதலாவது வெற்றி



வி.ரி.மகாலிங்கம் கிரிக்கெட் தொடரில் ஹாட்லியைற்ஸ் அணி ஸ்கந்தா ஸ்ரார் அணியை 6 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 16 ஓவர்களில் 7 இலக்கினை இழந்து 142 ஓட்டங்களை பெற்றது.

மணிமாறன் - 26, றஜீவன் - 19, ராஜ்குமார் - 23, பிரதீஸ் - 15, புருசோத்மன் ஆட்டமிழக்காது - 26, ஓட்டங்களை பெற்றனர்.

புருசோத்மன் - 01, சோபிகன் - 02, துபிஸன் - 02 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 16 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

மிதுஸன் - 24, துவாரகன் - 25 ஓட்டங்களை பெற்றனர். பிரதீஸ் - 02, நிஸாந்தன் - 01, சாகித்தியன் - 01 இலக்கினை கைப்பற்றியுள்ளனர். (க)

# காலிறுதியில் வீனஸ் அணி



மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்துச் சுற்றுப் போட்டியில் முறையே முதலாவது போட்டியில் பொற்பதி இந்து அணியையும்இரண்டாவதுபோட்டியில் கரவெட்டிஞானம்ஸ் அணியையும் வெற்றி கொண்டு காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது வீனஸ் அணி. (க)

# சென்.அன்ரனிஸ் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## வரணி ஸ்ரார் வெற்றி

மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உடுப்பிட்டி யுத் மோதியது.

போட்டி முடிவில் வரணி நியூஸ்ரார் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



சுனாமியால் இறந்தோர் ஞாபகார்த்தமான உதைபந்தாட்ட போட்டியில் (02.09.2017) அன்று நடைபெற்ற ஆட்டத்தில் வரணி நியூஸ்ரார் VS

வரணி நியூஸ்ரார் சார்பாக ம.பிரதீபன் - 01, க.விஜயதாஸ் - 01, ஆட்ட நாயகனாக ம.பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# பிரிவு I ற்கான உதைபந்தாட்டம்
# யாழ். சென்.மேரிஸை வீழ்த்தியது கொழும்பு ரட்ணம் விளையாட்டுக்கழகம்



களனிய கால்பந்து மைதானத்தில் நடைபெற்ற இவ்வருடத்திற்கான டிவிஷன் I (பிரிவு 1) கால்பந்து சுற்றுப் போட்டியின் முதல் நாள் ஆட்டமொன்றில் இரண்டாம் பாதியில் பெற்றுக்கொண்ட கோலின் மூலம் யாழ்ப்பாணம் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை 1-0 என கொழும்பு ரட்ணம் விளையாட்டுக் கழகம் வீழ்த்தியது.

கடந்த முறை பிரிவு இரண்டில் இரண்டாம் இடம் பெற்று இம்முறை பிரிவு ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட ரட்ணம் அணி வீரர்கள் இந்தப் போட்டியின் ஆரம்பம் முதலே தமது ஆதிக்கத்தை செலுத்தினர்.

எனினும், ஆட்டத்தின் போக்கிற்கு மாறாக சென்.மேரிஸ் அணி போட்டியின் முதலாவது வாய்ப்பை உருவாக்கியது. ரட்ணம் களத்தடுப்பில் ஏற்பட்ட சிறிய பிழையை சாதகமாகப் பயன்படுத்தி சிவநேசன் மதிவதனன் அடித்த பந்தை ரட்ணம் கோல் காப்பாளர் தடுத்தார்.

அதற்குப்பின் சுதாகரித்து விளையாடிய ரட்ணம் அணியின் முன்கள வீரர் ஒமுவாசென் ஒலவாலே மறுபக்கத்தில் கோலடிக்க, அது கோலுக்கு வெளியில் சென்றது.

தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ரட்ணம் அணிக்காக ப்ரி கிக் வாய்ப்பு கிடைக்கப்பெற அதனை மதுரங்க சற்றே மேலே உதைந்ததால் கோல் பெறும் சிறந்த வாய்ப்பு மீண்டும் பறிபோனது.

தொடர்ந்து சிறப்பாட்டத்தை வெளிக்காட்டிய மதுரங்க மீண்டும் பல வாய்ப்புக்களை உருவாக்கினார். எனினும் அவற்றின்மூலம் ரட்ணாம் அணிக்கான பலன் கிடைக்கவில்லை.

போட்டியின் மிக இலகுவான வாய்ப்பு 30வது நிமிடத்தில் ஒலவாலேயிற்கு கிடைக்க, அந்த வாய்ப்பையும் ஒலவாலே தவறவிட்டார். இரு அணிகளும் சமபலத்துடன் மோத முதலாம் பாதி எந்த வித கோல்களும் இன்றி முடிவடைந்தது.

முதலாம் பாதியைப் போலவே இரண்டாம் பாதியையும் உத்வேகத்துடன் தொடங்கியது ரட்ணம் கழகம்.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில், ரட்ணம் அணியின் இளம் வீரர் மொஹமட் அமானுக்கு கிடைத்த வாய்ப்பை அவர் நழுவவிட்டார். எனினும் அவரே போட்டியின் முதலாவது கோலுக்கு வித்திட்டார்.

ஆட்டத்தின் 59வது நிமிடத்தில் அமான் உள்ளனுப்பிய பந்தை மொஹமட் ஆகில் தலையால் முட்டி கோலாக்கினார்.

அவர் அடித்த கோலிற்குப் பின்பு சுதாகரித்த சென்.மேரிஸ் அணி வீரர்கள் புத்துணர்ச்சியுடன் விளையாடினர். எனினும் சென் மேரிஸ் அணியின் உள்ளனுப்பல்களை ரட்ணம் கழக பின்கள வீரர்கள் லாவகமாகத் தடுத்தனர்.

போட்டியின் இறுதி நேரத்தில் சென்.மேரிஸ் அணிக்கு ஹெடர் மூலம் கோலைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்பு கிடைத்த போதிலும் மரியதாஸ் நிதர்சன் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. (க)

# மகாலிங்கம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட போட்டி

## அம்பாள் வெற்றி

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் மகாலிங்கம் குடும்பத்தினரின் அனுசரணையில் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட (ஓவர் கேம்) சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 03.09.2017 அன்று நடைபெற்றது.

இதில் உடுவில் அம்பாள் விளையாட்டுக்கழக அணி கோண்டாவில் கிங் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை 30:29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தி வெற்றி பெற்றது. (க)




# சென்.ஜோன்ஸ் வெற்றி

பிரிட்டன் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி 16.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்துவீச்சில் கபிலராஜ், சனுசன் இருவரும் 3 இலக்குகளையும், அபிலக்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

58 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 6.3 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு எதையும் இழக்காமல் வெற்றி பெற்றது. சௌமியன் 28 ஓட்டங்களையும், சுபிட்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். (க)

## இணைந்த வட-கிழக்கில்...

இருந்து எதுவிதத்திலும் தம்மை வேறுபடுத்தவில்லை.

இந்த அரசாங்கமானது, 2015, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் ஐ.நா மனித உரிமை பேரவையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் எதனையும், நேர்மையான முறையில், ஐ.நா பேரவையில் வலியுறுத்தப்பட்டது போன்று, பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை உள்ளீர்த்து பூர்த்தி செய்யவில்லை. மாறாக, சர்வதேசத்தை ஏமாற்றும் பெயரளவிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே முற்கொண்டு செல்கிறது.

உலகின் உயர்சபையாகிய ஐ.நாவின் மனித உரிமை பேரவையினதும் மற்றும் ஜனநாயக செயன்முறைகளில் நம்பிக்கை கொண்டுள்ள நாடுகளினதும் கௌரவத்தை மதிப்பிழக்கச்செய்யும் வகையிலும் அவற்றிற்கு சவால் விடும் வகையிலும், ஐ.நா மனித உரிமை பேரவையில் குறிப்பிடப்பட்ட சர்வதேச நீதிபதிகள், பயங்கரவாத தடைசட்ட நீக்கம் போன்றவற்றை அப்பட்டமாகவே மறுதலித்து தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் அதிகார உயர்பீடத்தினரான ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை ஆகியோர் வெளிப்படையாகவும் உத்தியோக பூர்வமாகவும் கருத்துகள் வெளியிட்டுவருவது குறித்து சர்வதேச சக்திகள் தமது தீவிரமான கரிசனையை செலுத்த வேண்டும்.

●பொறுப்புக்கூறலில் மட்டுமல்லாது, தமிழ் மக்களின் அரசியல் விருப்பை, புதிய அரசியலமைப்புக்கான மக்கள் கலந்தாய்வுக்குழுவுக்கான சமர்ப்பணம் உட்பட பலதடவைகளில் மக்கள் வெளிப்படுத்தியிருந்த போதிலும அவற்றையெல்லாம் ஒரேயடியாக புறந்தள்ளுவதாகவே ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் புதிய அரசியலமைப்புக்கான மக்கள் கலந்தாய்வுக்குழு தலைவர் மற்றும் உத்தேச அரசியலமைப்பை வரையும் பிரமுகர்களின் கருத்துகள் இருக்கின்றன.

அரசாங்க உயர்பீடத்தின் உத்தியோக பூர்வ மறுதலிப்புகள், இந்த அரசாங்கத்துக்கும் தமிழர்களின் அரசியற் பிரச்சினையை தீர்ப்பது குறித்தோ அல்லது நேர்மையான பொறுப்புக்கூறல் குறித்தோ உண்மையான அரசியல் விருப்பு இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துவதாலும் நடைமுறை அனுபவத்தில் இலங்கை அரசின் முன்னெடுப்புகள் மீது தமிழர்கள் நம்பிக்கையை இழந்திருப்பதாலும், சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் தமது நேரடித்தலையீட்டை தாமதமின்றி மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை, மேலே பிரகடனப்படுத்தப்பட்ட மக்களது விருப்புகளின் அடிப்படையில் வழங்க வழிவகை செய்யவேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-9)

## வட-கிழக்கு...

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில், உத்தேச அரசியலமைப்பு முயற்சி குறித்த கருத்துப் பகிர்வு மற்றும் பிரகடன வெளியீடு நேற்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு "வடக்கு கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கு இணைப்பில் முஸ்லிம்களுடைய விவகாரம் சர்ச்சைக்குரிய விவகாரம் இல்லை, சந்திக்கு வர வேண்டிய சங்கதி என்பது தான் எனது பார்வை. அந்த யதார்த்தத்தை பேச முஸ்லிம் தரப்பில் இருந்து பொறிமுறை உருவாக்கப்படவில்லை என்பது எனது முதலாவது குற்றச்சாட்டு.

நாங்கள் சமஷ்டி என்று பேசினாலும் வடக்கு கிழக்கு இணைப்பு என்று பேசினாலும் நிலம் சார்ந்த ஒரு போராட்டத்தினுடைய அரசியல் பிரமாணங்கள் தான்.

வடக்கு கிழக்கு என்பது காணியும் நிலமும் இணைந்த பிரதேசம். அது தமிழ் பேசும் மக்களுடைய பூர்வீகமும் தாயகமும் என்பதால் நாங்கள் 1956ஆம் ஆண்டு திருமலை தீர்மானத்தில் இருந்து ஒன்றாய் தான் பயணித்து வந்தோம். தமிழர்களுக்கான சமஷ்டியும் முஸ்லிம்களுக்கான சமஷ்டியும் என்கின்ற விவகாரங்கள் பேசப்பட்டு வந்தது. கங்காருவையும் குட்டியையும் போல் தமிழ் தேசத்தின் மடியிலேயே தான் முஸ்லிம் தேசியம் அடைகாக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால ஆங்காங்கே அந்த தாய்மையை கேள்விக்குட்படுத்திய கருத்தியல் ரீதியிலான சம்பவங்களும் ஆயுதக்குழுக்களின் யுத்தகாலத்தில் நேர்ந்த துன்பியல் நிகழ்வுகளும் எமது தாய்மையை கேள்விக்குட்படுத்திவிட்டது.

அதன் விளைவாக வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் என்கின்ற கதையை இந்த அரசாங்கம் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகிறது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்ற விவகாரத்தில் இரு பரிணாமங்கள் உள்ளது. இலங்கையில் முஸ்லிம்களின் தேசியம் என்று பார்க்கும் போதும் அதில் இரு பரிணாமம் உள்ளது. ஒன்று வடக்கு கிழக்கு மண் சார்ந்த தேசியம், அதற்கு வெளியில் உள்ள முஸ்லிம்களின் இன்னுமொரு தேசியம் ஆக, வடகது கிழக்கு என்ற இணைப்பு வரும் பொழுது இரு தரப்பும் பேசியாக வேண்டும்.

அதாவது ஒன்று தமிழர்களும் முஸ்லிம்களும் பேசியாக வேண்டும். மற்றது வடக்கும் கிழக்கும் பேசியாக வேண்டும். இதனை துல்லியமாக பேசுவதற்கு முஸ்லிம் தரப்பில் காணப்படும் பொறிமுறை கோளாறு என்ன என்பதை வடக்கு மாகாண ஆளுமைகள் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைவது என்பது முஸ்லிம்கள் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக இதை உரித்தோடு கருத்து சொல்வதற்கு நாம் வடக்கு கிழக்கு பாரம்பரிய தனித்துவத்துக்காக உருவாக்கிய முஸ்லிம் தேசியத்தின் பிரதான கட்சியின் தலைமை மாற்றான்தாய் மனப்பாங்கோடு வடக்கு கிழக்குக்கு வெளியில் இருந்து வந்தது எமக்கு சாபக்கேடு என்பதை பகிரங்கமாக கூறுகிறேன்.

சேதாரம் இல்லாத விட்டுக்கொடுப்பு என்ற ஒரு வார்த்தையை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார். அவருக்கு சேதாரம் பற்றியும் புரியவில்லை செய்கூலிபற்றியும் புரியவில்லை. செய்கூலி பற்றி உணர்ந்தவருக்கு தான் சேதாரம் பற்றிய வலி தெரியும்.

அதேபோல் தமிழ்த் தேசியத்துக்கு வந்துள்ள வினை என்னவென்றால் ஐக்கிய தேசிய கட்சியினுடைய விம்பமாக தமிழ் தேசிய தலைமைகள் தொடர்ந்தும் இருப்பதற்கான பொறிக்குள் தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வந்துள்ளது.

வடக்கு முதலமைச்சரின் கருத்தை கிழக்கில் பிழையாகவும் கிழக்கு அரசியல் தலைமைகளின் கருத்தை வடக்கில் பிழையாகவும் புரிந்து கொள்வதற்கு ஏற்றது போல இன்று அரசியல் முரண்பாட்டினை திட்டமிட்டே உருவாக்குகிறார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழர்களும் முஸ்லிம்களும் நிலத்தொடர்பற்ற விதத்தில் இணைந்து வாழ்கிறோம். முஸ்லிம்களை சர்வதேசரீதியில் பயங்கரவாதிகளாக சித்தரிக்க வேணடிய சர்வதேச பொறிமுறை பிராந்திய ரீதியில் இருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்று வரும் போது இயற்கையின் பீதியை வெளிக்காட்டுகிறார்கள். ஏனென்றால் தொடர்ச்சியான புரிந்துணர்வில் தமிழ்த் தேசியமும் முஸ்லிம் தேசியமும் பேசவில்லை. வடக்கும் கிழக்கும் பேசவில்லை. எமது விவகாரங்களில் உள்ளக பொறிமுறைகளை நாங்கள் உருவாக்கவில்லை. இதனால்தான் பிரச்சினை என அவர் தெரிவித்தார். (மு-9)

## வெலிக்கடை தாக்குதல்...

பலர் காயமடைந்த சம்பவத்தின் பிரதான சாட்சியான சுதேஷ் நந்திமால் டி சில்வாவின் வீட்டின் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் மொரட்டுவ பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டின் மீது இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இந்த துப்பாக்கிச்சூடு காரணமாக சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார் சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்காக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ள இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் ரஜித் கீர்த்தி தென்னக்கோன், கடந்த ஆட்சியாளர்களைப் போன்று தற்போதைய அரசாங்கமும் வெலிக்கடைத் தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர்களை பாதுக்காக முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டினார். (மு-11)

## உள்ளக சுயநிர்ணய...

யலமைப்பு ஒற்றையாட்சி, சமஷ்டி என்ற பதங்கள் தாங்கி வெளிப்படையாக இனங் காணப்பட வேண்டுமா? என்ற தலைப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியும், பிரதமரும் ஒற்றையாட்சி அடிப்படையில்தான் தீர்வு என்று திரும்பத் திரும்ப சொல்கின்றார்கள். ஆனால் எம்மத்தியில் எங்களுடைய தலைவர்கள் அவர்கள் ஒற்றையாட்சியை தாண்டி வந்துவிட்டார்கள் என்று கூறுவது எந்த அடிப்படையில் என்ற கேள்வி எழுகின்றது. பொறுப்புக் கூறலாக இருந்தாலும், அரசியல் தீர்வாக இருந்தாலும் மைத்திரிபால சிறிசேனவினால் ராஜபக்ஷவால் வகுத்த எல்லைகளை தாண்டி வர முடியவில்லை. ஏனென்றால் சிங்கள பௌத்த வாக்கு வங்கியை தக்க வைக்க வேண்டும் என்றால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த எந்த நிலைப்பாடுகளை எடுத்தாரோ அதே நிலைப்பாடுகளில் இருந்து எள்ளளவும் மாற்றம் இல்லை என்று சொன்னால்தான் தாங்கள் தொடர்ந்தும் அரசியலில் நிலைக்கலாம் என அவர்கள் நம்புகின்றார்கள்.

இங்கு சிறிய நிலம் விடுவிக்கப்பட்டாலும், விடுவிக்கப்படவில்லை என்றே தெற்கில் இன்றைய அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. இதற்கு காரணம் ராஜபக்ஷ வகுத்த எல்லைகளை தாண்டி வராமல் அவர்கள் அரசியல் செய்கின்றார்கள். இன்னும் ஆழமாக பார்த்தால் இது ராஜபக்ஷ வகுத்த எல்லை கூட அல்ல, சிங்கள பௌத்த கருத்தியல் காலம் காலமாக வகுத்து வைத்துள்ள எல்லைக்குள் நிற்கின்றார்கள். ஆகவே அவர்கள் ஒற்றையாட்சி என்ற பதத்தில் தொங்கி பிடித்து நிற்பது சிங்கள பௌத்த அரசியல்வாதிகள்தான். தமிழர்களில் சிலர் இருக்கின்றார்கள். சமஷ்டி என்ற பெயர் புதிய அரசியலமைப்பில் வராவிடால் நிராகரித்து விடுவார்கள்.

அவர்கள் தீவிரமான போக்கை கொண்டவர்கள். அவர்களால்தான் தீர்வு குழம்பிவிடும் என்றால், ஒற்றையாட்சி என்ற பதம் அரசியலமைப்பில் வரவேண்டும் என கோருவது தென்னிலங்கை அரசியல்வாதிகள். ஏனென்றால் சிங்கள பௌத்த கருத்தியல் வகுத்து வைத்துள்ள எல்லைகளை தாண்டி வர அவர்கள் தயாரில்லை. இதனால் தான் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாநாட்டில் கூட ஒருவரையும் தொட கூட விட மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால கூறியுள்ளார். ஒரு பக்கம் நாங்கள் செய்கின்றோம் என கூறி வெளி நாடுகளுக்கு காட்டும் தரப்பு, இன்னொரு தரப்பு இந்த புதிய அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டும். ஆகவே அங்கு கூறுகின்ற எல்லாவற்றையும் இங்கு நாங்கள் செய்ய முடியாது என நினைக்கும் தரப்பு.

இந்த கட்டத்தில் புதிய அரசியலமைப்பு முயற்சி ஒன்றை செய்து முடித்து விட்டோம் என வெளிநாடுகளுக்கு காட்டும் தேவை உள்ளது. இதனால் தான் புதிய அரசியலமைப்பை ஒற்றையாட்சி என்றும் சொல்ல வேண்டாம். சமஷ்டி என்றும் சொல்ல வேண்டாம். உள்ளடக்கத்தில் என்ன உள்ளது என்று பார்ப்போம் என எமது தமிழரசியல் தலைமைகள் கூட கூறுகின்றனர். நாங்கள் போண்டாவை சாப்பிட்டு விட்டு வாய்ப்பன் என்று கூற முடியாது. அதேபோன்று வாய்ப்பனை சாப்பிட்டு விட்டு போண்டா என்று கூற முடியாது. ஒரு பண்டத்தை செய்து அதனை சிங்கள மக்களுக்கு ஒற்றையாட்சியாகவும், தமிழ் மக்களுக்கு இதில் சமஷ்டியின் கூறுகள் உள்ளன. படிப்படியாக அங்கு போகலாம் என கூறலாம்.

ஒரே பண்டத்தை இரு வேறாக விற்கும் இராஜதந்திரத்தில் தான் எங்களது தமிழ் தலைமைகள் உள்ளன. லேபில்கள் முக்கியமில்லை உள்ளடக்கத்தில் இருப்பதுதான் முக்கியம் என்றால், உள்ளடக்கத்தில் இருப்பதை ஏன் வெளிப்படையாக கூற முடியாது? லேபில் இல்லாமல் சிங்களத்தில் ஏக்கிய என பொருள்படும் வகையில் அரசியலமைப்பு வந்தால் உயர் நீதிமன்றம் என்ன சொல்லும்? ஒற்றையாட்சியின் கருது கோளாக தான் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அதிகமுள்ளது. இது ஏங்களுடைய வரலாறு.

சமஷ்டி அல்லது ஒற்றையாட்சி என்று இரண்டுமே இல்லாவிட்டாலும் அந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் என்பது நாங்கள் அறிந்த வரலாறு. ஆகவே தான் உள்ளடக்கம் நல்லா இருந்தாலும் தலைப்பு அவசியம் என்று வலியுறுத்துகின்றோம். உள்ளக சுயநிர்ணய உரிமையை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு விட்டுள்ளது என ஒரு தரப்பு பரப்புரை செய்து வருகின்றது. ஆனால் அந்த தீர்ப்பில் கடைசி பந்தி தான் நீதிபதியின் தீர்ப்பாக உள்ளது.

இந்த வழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் தோன்றிய சட்டத்தரணிகளின் சமர்ப்பணத்தில் தான் உள்ளக சுய நிர்ணயம் என கூறியுள்ளார்கள். இது கனடா உயர் நீதிமன்ற தீர்ப்பில் உள்ளதாகவும் கூறியுள்ளார்கள். ஆனால் உயர் நீதிமன்ற தீர்ப்பில் உள்ளக சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டதாக இல்லை என்பது அந்த தீர்ப்பை பார்த்தால் தெரியும். சமஷ்டி என்று வந்தாலும் உள்ளடக்கத்தில் ஒற்றையாட்சி கூறுகள் இருக்கலாம் எனவும் தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது. எனினும் சமஷ்டி பிரிவினை அல்ல என்பதை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த தீர்ப்பை கவனமாக பார்த்தால் உள்ளக சுய நிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தவறான கருத்தாகும்.

இறுதியாக அரசியலமைப்பு ஆக்கத்தினை தங்களுடைய சர்வதேச உறவுகளில் ஏன் முக்கியத்துவப்படுத்துகின்றனர்? பொறுப்புக் கூறலை இல்லாமல் செய்வதற்கு. இரண்டாவது ஒற்றையாட்சி சமஷ்டி என்ற பதங்கள் இல்லாமல் வரக்கூடிய அரசியலமைப்பு கிட்டத்தட்ட 13ஆம் திருத்த சட்டத்தை ஒத்ததாக வரக்கூடிய இன்றைய அரசியலமைப்பு வெறும்னே ஒற்றையாட்சி என்ற பதத்தை கொண்டிருக்கா விட்டால் மாத்திரமே தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்பது தொடர்பில் கவனமாக பதில் கூற வேண்டும். என தெரிவித்தார் குருபரன். (மு-4)

## அரசை வீழ்த்தும்...

ராஜபக்ஷ கூறியுள்ளார்.

வீரகெட்டிய பிரதேசத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்ததோ அப்போதே மாற்றுக் கட்சிக்கான தேவை ஏற்பட்டுள்ளது.

நாட்டைத் தனியார் மயப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை தெளிவாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அரசை வீழ்த்தும் பலமான அணி ஒன்று உருவாவதைத் தடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (மு-11)

## கலப்பு நீதிமன்ற...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இராணுவத்தினர் மீது எவரையும் கை வைக்கவிடமாட்டேன் என்று சூளுரைத்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்கின்றார் என்பதற்காக எல்லா விடயங்களும் தடைப்பட்டு போய்விடாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டபடி சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும். இதனை அவர் செய்யாவிட்டால் முழுக்க முழுக்க சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய சர்வதேச விசாரணையே முன்னெடுக்கப்படும். சர்வதேச சமூகத்துக்கு இணங்கிக் கொண்ட விடயங்களைச் செய்வதுதான் நல்லது என்றார். (மு-11)

# இணைந்த வட - கிழக்கில், சுயநிர்ணய அடிப்படையில்...

படைக்காரணிகளை இனம்கண்டு நிரந்தர மாகத் தீர்ப்பதாக அமைய வேண்டும்.

● வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தில், சுயநிர்ணய உரிமையின் அடிப் படையிலான, மதசார்பற்ற சமஷ்டித்தீர்வே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதோடு இலங்கைத்தீவின் கௌரவமும் சமாதானமும் மதிக்கப்பட்டு சகல இனங்களும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் வல்லது.

இது தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசை என்பதும் பல தசாப்தங்களாக தேர்தல்களில் வழங்கிய ஆணைகள், திம்பு பிரகடனம் போன்ற சர்வதேச பிரகடனங்கள், பொங்குதமிழ், எழுகதமிழ் போன்ற மக்கள் எழுச்சி நிகழ்வுகள் மூலமும் மிகத் தெளி வாக பலதடவைகள் வெளிப்படுத்தப்பட்ட ஜன நாயக விருப்பும் ஆகும்.

இணைந்த வடக்கு கிழக்கில் தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீ கரிக்கப்பட்டு அதன் தனித்துவமான இறைமை யின் அடிப்படையிலான சமஷ்டித்தீர்வு என்பது விட்டுக்கொடுக்கமுடியாத அடிப்படை அரசியல்கோரிக்கை என்பதும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான எந்த தீர்வும் இதன் அடிப்படையிலேயே அணுகப்படுவதே நேர்மை யானதும் நீடித்து நிலைக்கக்கூடியதும் ஆகும்.

● வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் (திட்டமிட்ட அரச குடியேற்றங் களால் குடியேற்றப்பட்டவர்கள் நீங்கலாக) இயற்கையாகவே வாழும் முஸ்லிம், சிங்கள மக்களும் இந்த சமஷ்டி அலகின் சகல உரி மைகளுக்கும் உரித்தானவர்கள். இணைந்த வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்கள் தமக்கான அரசியல் அதிகார அலகை கோருவதற்கான உரிமைக்கு உரித்துடையவர்கள்.

● இலங்கையின் உத்தேச அரசிய லமைப்பானது, மலையகத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகள், அடிப்படைத் தேவை கள் என்பவற்றை திருப்திப்படுத்துவதாக இருக்கவேண்டும். இதற்கான குரலையும் தோழமை உறுதிப்பாட்டையும் நாம் என் றும் வழங்குவோம்.

● கடந்த எழுபது ஆண்டுகளாக தமிழர் கள் மீது திட்டமிட்டவகையில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் இனப்படு கொலையில் இருந்து எமது இனத்தின் இருப்பை பாதுகாத்துக்கொள்ளவும் மேற்சொன்ன அரசியல் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்தோடு, சர்வதேச நீதிமன்றம் அல்லது ஐ.நா. மேற்பார்வையிலான சர்வதேச குற்ற வியல் தீர்ப்பாயம் போன்ற சுயாதீன சர்வதேச குற்றவியல் நீதி விசாரணைப்பொறிமுறை மூலம் இந்த இனப்படுகொலைக்கான பொறுப் புக்கூறல் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

எமது அரசியல்தீர்வுக்கான கோரிக்கை யும் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூற லும் விட்டுகொடுப்புக்கோ தம்மிடையே பதிலீட்டுக்கோ உரியவை அல்ல. இவை இரண்டும் பூர்த்தி செய்யப்படுவதன் மூலமே இயற்கை நீதியின் அடிப்படையில் தமிழர் களுக்கான நியாயம் கிடைக்கும்.

● அரசியல் தீர்வு குறித்தும் பொறுப்புக் கூறல் குறித்தும் சர்வதேச அரங்குகளில் வாக்குறுதிகளை வழங்கி விட்டு, அவற்றை பூர்த்தி செய்யாது, காலத்தை இழுத்தடித்து ஏமாற்றுவதே, இலங்கை அரசு காலம் காலமாக மேற்கொண்டுவரும் நடைமுறையாகும்.

சர்வதேச நெருக்கு வாரங்களில் இருந்து தம்மை பாதுகாப்ப தற்கான ஒரு யுக்தியாகவே இந்த பொய் வாக்குறுதிகளை வழங்குவதனையே இலங்கை அரசாங்கங்கள் தம் வழக்கமாக கொண்டுள்ளன.

அந்த வகையில் இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களில் 23☛

# மரண அறிவித்தல்

## வைரமுத்து பரமானந்தம்

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

மலர்வு 13 ● 10 ● 1926



உதிர்வு 04 ● 09 ● 2017

அராலியை பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து பரமானந்தம் 04.09.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராஜஇராஜேஸ்வரி தம்பதி களின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தர்மபூபதியின் அன்புக் கணவரும், மணிசேகரன், மதிவதனி, மோகனசேகரன், உதயசேகரன், ஜெயசேகரன், நிர்மல சேகரன், தனசேகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலாரமணி, சரவணப வன், அம்பிகாதேவி, கமலினி, சிவபவானி, கீதா, பிறேமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரண்யா, கௌசல்யா, ஸ்ரீராம், ராம்பிராஷ், ஆரபி, கயல்விழி, யதுகுலன், கிருஸ்ணிகா, தமிழினி, கோகுலன், நிலேஷ், நிலக்ஷி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி, துர்க்காபுரம், தெல்லிப்பளை. 021 205 9829, 077 984 7694 தகவல்: குடும்பத்தினர். (451)


6 மாதத்தில் வேலைவாய்ப்பு
வேலைசெய்துகொண்டே பட்டப்படிப்பு / விரும்பிய நாடு செல்வதற்கான விசா
UK, Australia, New Zealand, Canada, Malaysia, Singapore ஏற்பாட்டுடன்
COURSES IN BUSINESS - TOURISM - HOSPITALITY & MEDIA STUDIES
HND/Degree (2-3 YEARS)
Advanced Diploma (6-12 MONTHS)
Diploma Level (3-6 MONTHS)
Fast Track (1-3 MONTHS)



FREE Computer Basics & ENGLISH
வடமராட்சி மாணவர்களுக்காக... கரவெட்டி பிரதேச செயலகத்தில் JOB FAIR SEP. 8.9
வகுப்புக்கள் ஆரம்பம் செப்ரெம்பர்.15 வெள்ளி காலை 9.30 மணி
100% JOB GUARANTEED மேலதிக விபரங்களுக்கு 077 36 16 798
SIKARAM ACADEMY Business · Hospitality · Media
FAST TRACK to CAREERS (C-9554)
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), (Pizza Hut அருகில்), யாழ்ப்பாணம். 021 222 60 11
www.sikaram.lk

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking courses
IABF & DABF
(tamil & English medium)
Qualification:-GC.E.O/L 6 passes with 5 Credits including maths
ஆரம்பம் :- 23/9/2017
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business level
(tamil&English medium)
Qualification :- G.C.E A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
ஆரம்பம் :- 23/9/2017 (C-9534)
Students Awaiting (A/L) Results
Enrich Your Proficiency in English
Certificate Course in English
15 Batches have Sucesfully Completed the Course Register your names before 23/9/2017
Further Details : Jaffna college Undergraduate dept. 464, Hospital Road, Jaffna. 0212223382/0212229149

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➤ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➤ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➤ யாரும் படிக்கலாம் www.amb-afrancie-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

உடனடி வேலைவாய்ப்பு
V2 TRAVELS & TOURS(PVT)LTD
விளம்பர வடிவமைப்பாளர் தேவை
PHOTOSHOP, WEB DESIGNING
நன்கு தெரிந்த பெண் ஊழியர் தேவை
உடன் தொடர்புகளுக்கு :-
0768226241 (C-9553)

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கில டிப்ளோமா பிரிவு ஆரம்பம்
இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில டிப்ளோமா பாடநெறி!
Diploma in English
காலம்: 06 மாதங்கள்



புதிய பிரிவு ஆரம்பம்
09.09.2017, 8.30 A.M
(சனி/ஞாயிறு தினங்களில் காலை 8.30 - 10.30 மணி வரை இடம்பெறும்)
முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை!
E-CITY COLLEGE OF ENGLISH
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
Tel :0212217106 / 0770616271 /0774924166
web; ecitycollege.lk
உயர் தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பாடநெறியின் 20 வீதம் கட்டணக் கழிவு வழங்கப்படும்.

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK - 550/= (C-9462)
கப்பல் மூலம் கனடாவிற்கு பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே
V2 TRAVELS - 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
UK - 550/- Kg (C-9464)
விமானப் பயணச்சீட்டுக்கள், விரைவுப்பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடிவரா?
5,000/= (பயிற்சியின் போது) / 15,000/= (பயிற்சியின் பின்னர்)
நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241

பதவி வெற்றிடங்கள்
2017 A/L எழுதிய மாணவர்களே!
எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்திலிருந்து அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச கம்பனியில் பணிபுரிய ஆட்கள் தேவை.
✹ வயதெல்லை 18-30
✹ அனுபவம் அவசியமற்றது
✹ தகுந்த பயிற்சியளித்து உள்வாங்கப்படுவர்
✹ தங்குமிடம் இலவசம் (450)
தொடர்புகளுக்கு : 076 678 1042, 021 567 9002

A/L முடித்த உங்களுக்கு சிறந்த வாய்ப்பு
முறையான முகாமைத்துவ பயிற்சி, சர்வதேச அனுபவத்துடன், உங்களது திறமைகளுக்கு முக்கியத்துவம் மற்றும் பயிற்சியின் போது 18,000 வருமானம், சர்வதேச நிறுவனத்தின் நிரந்தர வேலை, முகாமைத்துவ பதவிகளுக்கான வாய்ப்பு மற்றும் மாதவருமானம் (75,000/= EPF / ETF) உடனடி தொடர்புகளுக்கு.
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு : 0777 009 820
மன்னார் : 077 512 7011 (449)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.